# ஆசிய விழாக்கள்

ஆசிய கூட்டுப் பிரசுரத் திட்டத்தின் கீழ் யுனெஸ்கோ ஆசிய கலாசார நிலையத்தின் பணிப்பின்படி வெளிவரும் இரண்டாம் நூல்வரிசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய விழாக்கள்

பரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசியக் கூட்டுப்பிரசுரத் திட்டத் தொடர்வெளியீடு இரண்டு
யுனெஸ்கோ—ஆசிய பண்பாட்டு நிலையத்தின் ஆதரவைபெற்றது

# ஆசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

யப்பானிலுள்ள யுனெஸ்கோ ஆசிய பண்பாட்டு நிலையத்தின் ரோக்கியோ நூல் அபிவிருத்திச் சபையின் பணிப்பின்படி இலங்கை யுனெஸ்கோ தேசிய சபையின் ஆதரவையும் இலங்கைத் தேசிய நூலபிவிருத்திச் சபையின் அனுமதியையும் பெற்று, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Original Title: *Festivals in Asia.* Published under the Asian Copublication Programme carried out in cooperation with Unesco, by the Asian Cultural Centre for Unesco/Tokyo Book Development Centre. The stories have been selected and edited by a five-country editorial board with the help of Unesco member states in Asia.

Copyright © 1975 by the Asian Cultural Centre for Unesco/Tokyo Book Development Centre, 6 Fukuro-machi, Shinjuku, Tokyo, Japan.

Tamil Edition: Prepared and Edited by I. Thambimuttu. Published by the Educational Publications Department, Sri Lanka, under the Asia Copublication Programme. Sponsored by the Asian Cultural Centre for Unesco. Copyright © 1975 by the National Book Development Council of Sri Lanka. Printed by the State Printing Corporation, Sri Lanka. (2,000/76/ලද/86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிறுவர்க்கு. . .

| | | |
|---|---|---|
| சியோ மிங்குடன் புத்தாண்டு | சிங்கப்பூர் | 9 |
| தீ விழா | ஈரான் | 17 |
| பாவைத் தினமும் சிறுவர் தினமும் | யப்பான் | 23 |
| வங்காளப் புத்தாண்டு | பங்களதேஷ் | 31 |
| நீர் விழா | பர்மா | 37 |
| அங்கோரில் புத்தாண்டு | கம்போடியா | 43 |
| லாவோஸ் புத்தாண்டு | லாவோஸ் | 49 |
| தமிழ் சிங்களப் புத்தாண்டு | இலங்கை | 55 |
| மேகாலம் | பிலிப்பீன்ஸ் | 61 |

நன்றியுரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுவர்க்கு...

இந்நூல் ஒன்பது ஆசிய விழாக்கள் பற்றி இளம் வாசகருக்கு எடுத்துரைக்கின்றது. விழா எனப்படுவது புத்தாடை அணிவதற்கும் பக்திக் கீதங்கள் பாடுவதற்கும், பட்டாசுகள் கொளுத்துவதற்கும், இனிய பண்டங்கள் தயாரிப்பதற்கும், வாழ்த்துக்கள் கூறுவதற்குமுரிய ஒரு சந்தர்ப்பமாம். அது ஒரு சமயத்தத்துவத்தை அல்லது பருவகாலத்தைக் குறித்தே கொண்டாடப்படும். ஆனால் இலங்கையிலோ அபுகானிஸ்தானிலோ கொண்டாடப்படினும் விழாக்களிடையே பல பொதுவான இயல்புகளைக் காணலாம். ஏனெனில், வாழ்க்கை இன்பவுணர்ச்சியும் இயற்கை அன்னைக்கு நன்றி செலுத்தும் உணர்ச்சியும் எத்தேசத்தவருக்கும் பொதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சியோ மிங்குடன் புத்தாண்டு

புற்றத்திலே விளையாடிக்கொண்டிருந்த அந்த நான்கு வயதுக் கொழுங்குட்டையான சிறுவனை அவனுடைய தாய் ''சியோமிங்! சியோமிங்!'' என்று கூப்பிட்டு ''உனக்கு ஒரு நல்ல செய்தி'' என்று சொன்னாள். அவளுடைய கையிலே ஒரு கடிதம் இருந்தது; முகத்திலே மகிழ்ச்சி பொங்கியது. ''சீனப் புத்தாண்டுக்காக நாளை உனது அப்பா வீடு வருகிறார். உனக்குப் பெரிய சந்தோசம்! இல்லையா?'' என்று வினவிக்கொண்டு அவனைத் தூக்கி ரோசா மலர்போன்ற அவனுடைய கன்னத்தில் இறுக்கி ஒரு முத்தம் கொடுத்தாள்.

சீனப் புத்தாண்டுக்கு, அதாவது சீனர் கூறுவது போன்று, கோநியெனுக்கு இரண்டு நாட்கள் இருந்தன. சியோமிங்குடனும் தாயுடனும் புத்தாண்டு கொண்டாடச் சியோவின் அப்பா ஒவ்வொருமுறையும் வீட்டுக்கு வருவார். அச்சிறுவனுக்குத் தகப்பனைப் பற்றி நல்ல ஞாபகம் இல்லை. ஆனால் உலகத்தைச் சுற்றிப் பிரயாணஞ் செய்கின்ற ஒரு பெரிய கப்பலிலே அவர் வேலை செய்கின்றாரெனத் தாயார் கூறுவது அவனுக்கு ஞாபகம். புத்தாண்டு கொண்டாடவே தகப்பன் வீட்டுக்கு வருகின்றாரா அல்லது அவர் வீட்டுக்கு வருகிறதனாலே தாங்கள் புத்தாண்டைக் கொண்டாடுகின்றார்களா என்பது சியோவுக்குத் திடமாகத் தெரியாது. தகப்பனார் வீடு வந்தால் சியோவுக்கு எப்பொழுதும் குதூகலம். உண்ணச் சுவையான பல பண்டங்கள் இருக்கும்! கொளுத்தி விளையாட ஏராளமான பட்டாசுகள் கிடைக்கும்! மாமன் மாமியரிடமிருந்து சிறு சிறு சிவப்பு உறைகளிற் பணம் கிடைக்கும்!

''அம்மா, அந்தக் கொடிய வேதாளத்தின் கதையை ஒருமுறை சொல்லுங்கள்'' என்று கெஞ்சினான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவள் கீழே உட்கார்ந்து அவனை மடியில் இருத்திக்கொண்டாள்.


''முன்னொரு காலத்தில் நியென் என்ற கொடிய வேதாளம் ஒன்று

இருந்தது. கிராமத்து மக்களுக்கு நியென் என்ருல் ஒரே பயம். ஏனென்ருல் ஒவ்வொரு வருடமும் புத்தாண்டுக்கு முதல் நாள் உணவு தேடிக் கொண்டு அந்த வேதாளம் அதனுடைய குகையிலிருந்து வெளியே வரும். அப்போது எல்லோரும் கதவுகளையும் யன்னல்களையும் பூட்டிக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருப்பார்கள்.

''ஆனல் நியெனுக்குச் சிவப்பு நிறம், தீ, வெடிச்சத்தம் ஆகிய மூன்றுக்கும் பயம். எனவே நியெனை வெருட்டித் துரத்தவெனப் புத்தாண்டுக்கு முதல்நாள் மக்கள் எல்லாக் கதவுகளுக்கும் சிவப்புப்பூச்சுப் பூசுவார்கள். அத்துடன் ஏராளமான பட்டாசுகளையும் கொளுத்துவார்கள். தீயைக் கண்டால் நியென் ஒரே ஓட்டமாக ஓடிவிடும்; வெடிச்சத்தம் கேட்டால் பயந்துவிடும்.

''அடுத்தநாள் காலையிலே எழுந்து யன்னல்களைத் திறந்து வெளியே பார்த்தால் நியெனை ஒரு இடமும் காணமுடியாது. எனவே, எல்லோரும் நல்ல ஆடைகள் அணிந்து கேக் முதலிய இனிப்புப் பண்டங்களை நிறைய உண்டு நியென் தொலைந்துவிட்டது என்று சந்தோஷம் கொண்டாடுவார்கள். அடுத்த புத்தாணடுக்கு முதல்நாள்வரை அந்தக் கொடிய வேதாளம் வரமாட்டாது என்று கிராம மக்கள் எல்லோரும் சந்தோசம் கொண்டாடுவார்கள். இனி ஒருவிதமான ஆபத்தும் இல்லை என்பதனல் பிள்ளைகள் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறுவதற்காக மாமன் மாமிமார்களையும் நண்பர்களையும் பார்க்கச் செல்வார்கள். வாழ்த்துக் கூறும்போதெல்லாம் அவர்களுக்குப் பணம் வைத்த சிவப்பு உறைகள் கிடைக்கும். அதுவே கோ நியென் என்பதனுடைய கருத்து. அப்படியே நாங்கள் அதனைக் கொண்டாடுவோம்.''

நியெனினுடைய கதையைத் தாய் சொன்னபோது அச்சிறுவன் மிக்க மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்தான். அதன்பின்னர் புத்தாண்டுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய ஆயத்தங்களைச் செய்வதற்கு அவன் தாயாருக்கு உதவி செய்தான். இருவருமாக வீட்டைத் துப்புரவாகக் கூட்டிச் சுத்தஞ் செய்து எல்லாப் பொருள்களையும் ஒழுங்காக வைத்தார்கள். அதன்பின்னர் சியோவினுடைய தாயார் சிறு சிறு கேக் வகைகள் செய்தார். அன்று சாயந்தரம், நண்பர்களிடமிருந்து கிடைத்த அழகான புத்தாண்டு அட்டைகளைத் தொங்கவிட்டு வரவேற்பு அறையை அலங்கரிக்கச் சியோ தாயாருக்கு உதவி செய்தான்.



அடுத்தநாள் புத்தாண்டுக்கு முதல்நாள். அன்று முந்திய நாளைவிட சியோவின் தாயாருக்கு நிறைய வேலைகள் இருந்தன. சியோவின் மனதில் நியெனுடைய கதை ஞாபகமாக இருந்தது. எனவே நியென் அண்மையிலே சுற்றித் திரிந்தாலும் என்று சில பட்டாசுகளைக் கொளுத்த எண்ணினன்.

அன்று காலை அவனுடைய தாயார் கொடுத்த பட்டாசுகளில் கைநிறைய எடுத்துக்கொண்டு, பட்டாசுகள் கொளுத்திக்கொண்டுநின்ற மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து கொளுத்த வெளியே ஓடினன். சிரித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டு மேலும் மேலும் பட்டாசுகள் எடுப்பதற்காக அவன் வீட்டுக்குள்ளே வருவதும் வெளியே ஓடுவதுமாக இருந்தான். ''நியென் வேதாளம் கட்டாயம் பயந்து ஓடிவிடும்'' என்று அவன் எண்ணினன்.

திடீரெனப் பின்பக்கத்திலிருந்து யாரோ அவனைக் கூப்பிடுஞ் சத்தம் அவனுக்குக் கேட்டது. காய்ந்து கறுத்த ஒரு நெட்டை மனிதன் தனக்குப் பின்னல் நிற்கக்கண்டான். அவனுக்குச் சிறிது வெட்கமும் பயமும் உண்டாயின. எனவே ''அம்மா, அம்மா'' என்று கூப்பிட்டுக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் வீட்டுக்குள்ளே ஓடினன்.

கைகளிலெல்லாம் மா புரண்டிருந்தபடி குசினியிலிருந்து வெளியே ஓடிவந்த அவனுடைய தாயார் ''வாங்க வாங்க'' என்று அந்த நெட்டை மனிதனை வரவேற்ருள். ''சியோமிங், அப்பா வந்துவிட்டார்'' என்று மகனுக்குச் சொன்னுள்.

''அப்பா" என்று சியோமிங் சற்றுக் கூச்சத்துடன் சொன்னுன்.

அப்போது அந்த மனிதன் சியோவுக்குக் கிட்டச் சென்று அவனை மேலே தூக்கிக்கொண்டு பம்பரம் போலச் சுழன்ருர். 'இந்த ஆசானுபாகுவே என்னுடைய அப்பா' என்று எண்ணிச் சியோ தன்னுள்ளே மகிழ்ந்தான்.

அன்று இரவு சியோமிங்கின் தாய் சுவையான பல பண்டங்களைத் தயாரித்து மேசையில் வைத்திருந்தாள். வருடத்துக்கு ஒருமுறை, சீனக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் குடும்பத்தவர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து உண்ணுகின்ற இந்த இராப்போசனத்தை உண்பதற்குச் சியோமிங்கும் பெற்ருேரும் உட்கார்ந்தனர். சாப்பிடும்போது சமுத்திரம் பற்றிப் பல கதைகளைச் சியோமிங்கின் தகப்பன் கூறினுர். பெரிய கப்பல் ஒன்றிற் பிரயாணஞ்செய்வது எவ்வளவு சுவையான ஓர் அனுபவம் என்று அச்சிறுவன் எண்ணினுன்.

அடுத்தநாள் காலை பட்டாசுகள் சடசடக்கும் சத்தம் கேட்டுச் சியோமிங் கண்விழித்தான். அவன் கண்விழித்தபோது, 'இனிய புத்தாண்டு' என்று தாயார் வாழ்த்தினுள். ''சீக்கிரம் எழும்பு சியோமிங். உன்னுடைய மாமா மாமி எல்லாரையும் பார்த்துவிட்டுச் சிங்க நடனம் பார்க்க நாங்கள் போகவேண்டும்'' என்று தகப்பனுர் கூறினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியோமிங் கட்டிலிலிருந்து துள்ளிப் பாய்ந்தான். தாயார் அவனுக்குப் புத்தாடைகள் உடுத்தினாள். அதன் பின்னர் அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். வழியில் அவர்கள் கண்ட பல வீட்டுக் கதவுகளிலே 'இனிய புத்தாண்டு', 'புத்தாண்டில் இன்பம் பொங்குக' என்று பொன் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தன.

சியோமிங் அவனுடைய மாமன் மாமிமார்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறினான். அவர்களும் சியோவுக்கும் பெற்றோருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறினார்கள். பாகும் பருப்பும் வைத்து வெள்ளை, சிவப்பு நிறங்களிற் செய்த சிறு சீன மோதகங்களை சியோமிங்கின் மாமிமார் ஒரு சிறு கிண்ணம் நிறைய அவனுக்குக் கொடுத்தார்கள். சீன மோதகங்களின் உருண்டைவடிவம் குடும்பத்தினர் ஒற்றுமையாகவும் சௌக்கியமாகவும் இருப்பார்கள் என்பதைக் குறிப்பதனாலேயே சீனர் புத்தாண்டுத் தினத்தன்று சீன மோதகங்கள் சாப்பிடுவதாகச் சியோவின் மாமிமார் கூறினார்கள். சிங்கநடனத்துக்குப் போவதற்கு நேரமானபோது, சியோவின் இரு பைகளிலும் இனிப்பு வகைகளும் சிவப்பு உறைகளும் நிறைந்திருந்தன.



சிங்க நடனம் தொடங்குவதற்கு நேரம் இருந்தது. ஆனால் நடனக்காரரர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு பெருந்திரளான மக்கள் வீதியிற்கூடிநின்றனர். சனக்கூட்டத்தைச் சுற்றி எங்கும் பட்டாசுகள் வெடித்தன. ஓர் உயர்ந்த கட்டடத்திலே யன்னலுக்கூடாக ஒரு மூங்கில் தடி வெளியே வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தடியிலே ஒரு பட்டாசுக் கோவை தொங்கவிடப்பட்டு இருந்தது. அவற்றில் ஒரு பட்டாசை யாரோ ஒருவர் கொளுத்திவிட்டதும் அவை எல்லாம் படார்! படார்! படார்! என்று வெடித்தன. நாலா பக்கமும் தீப்பொறிகள் பறந்தன. எங்கும் ஒரே புகை.

அப்போது மேளதாளங்களினதும் எக்காளங்களினதும் சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் சியோமிங்குக்குக் கேட்டது. ''சிங்க நடனம்! சிங்க நடனம்!'' என்று கை கொட்டி ஆரவாரித்தான்.

சியோமிங்கைத் தகப்பனார் தோளில் இருத்திச் சிங்க நடனம் காட்டினார். பெரிய பறட்டைச் சிங்கம் ஒன்று சிரித்துக்கொண்டு கம்பீரமாக வந்தது. அதற்குப் பின்னால் ஒரு சிறிய சிங்கம் வந்தது. சிங்க உடுப்பின்கீழ் நடனக்காரருடைய கால்கள் சியோவுக்குத் தெரிந்தன. சிங்கங்கள் இசைக்கேற்பத் தலையை அசைத்து அசைத்து ஆடின; குத்துக்கரணம்போட்டுப் பின்னங்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் நின்றன. இசை நின்றதும் அவை வணங்கிவிட்டுக் கம்பீர நடைபோட்டுக்கொண்டு சென்றன. எல்லோரும் சந்தோஷப்பட்டுக் கைகொட்டினார்கள். ஏனெனில் டிராக்கன், பீனிக்ஸ் போன்று சிங்கமும் அதிட்டத்தையும் சௌகரியத்தையும் தருகின்ற ஒரு மிருகம் என்பது சீன மக்களுடைய நம்பிக்கை.

அன்று சியோமிங்கும் பெற்றாரும் வீட்டை அடைந்ததும் தாய் அவனைத் துயிலவைத்தாள். இரவு எவ்வளவோ கழிந்துவிட்டதெனினும் சியோவுக்குத் தூக்கம் வரவில்லை. சிங்க நடனம், பட்டாசுகள், மாமன் மாமிமார் கொடுத்த சிவப்பு உறைகள் பற்றியும், அன்று தான் பெற்றாருடன் இன்பமாகப் புத்தாண்டைக் கழித்தமை பற்றியும் சிந்தித்துக்கொண்டு படுத்திருந்தான். தூக்கம் வந்தபோது ''சீனப் புத்தாண்டு அடுத்து எப்போது வரும்?'' என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் கண்ணயர்ந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீ விழா

புத்தாண்டு வருகின்றது! புத்தாண்டு வருகின்றது! நாளை எனக்குப் புதுச் சப்பாத்து வாங்கித் தருவதாக அப்பா கூறியிருக்கிறார். ஏனெனில் நாளை ஒரு விசேடமான தினம். இறுதிப் புதன்கிழமை என்று நாம் கூறும் நாள். ஈரானில் இது மிகவும் சிறப்பான ஒரு நாள். அன்று எரியும் புதர்களுக்குமேல் பாய்ந்து நாம் விளையாடுவோம். இப்புதர்களை சந்தையில் அல்லது கடைகளில் வாங்குவோம். பொழுது பட்டதும் அவற்றை வரிசை வரிசையாகக் கொளுத்திவிட்டு அவை சுவாலையுடன் எரிகின்றபோது அவற்றுக்கு மேலாகப் பாய்வோம்.

இம்முறை இறுதிப் புதன்கிழமையே எனக்குப் புதுச் சப்பாத்து வாங்குவதாக அப்பா சொன்னார். அன்று பொருள்கள் வாங்குவதில் நல்ல அதிட்டமுண்டாம். ஆனால் அதுவரை காத்திருக்க நான் விரும்பவில்லை. எனது ஆவலை அடக்கமுடியாமல் ''அன்று எல்லாச் சப்பாத்துக்களும் விற்பனையாகிவிட்டால் என்ன செய்வது?'' என்று பொறுமையின்றி அப்பாவைக் கேட்டேன். அப்பாவுக்குச் சிரிப்பு வந்தது. ''எப்படியும் சில ஆவது இருக்கும். புத்தாண்டுக்கு ஒவ்வொருவருக்கும் புதுச் சப்பாத்து இருந்தேயாக வேண்டும்'' என்று அவர் சமாதானம் கூறினார்.

சென்ற வருடம் புத்தாண்டுத் தினத்துக்கு ஏறக்குறைய ஒரு மாதத்துக்கு முன்னரே நான் புதுச் சப்பாத்து, சொக்ஸ் எல்லாம் வாங்கிவிட்டேன். இறுதிப் புதன் விழாவுக்கு அவற்றைப் போட்டுக்கொள்ள நான் விரும்பியபோது ''அவை புத்தாண்டுக்கு'' என்று சொல்லி அப்பா என்னைத் தடுத்து வைத்தது எனக்கு நல்ல ஞாபகம்.

கடந்த வருடம் இறுதிப் புதனன்று எவ்வளவு குதூகலம்! விழாவுக்குப் புதர்கள் வாங்குவதற்கு அப்பா என்னைக் கூட்டிக்கொண்டு அதிகாலையில், சந்தைக்குச் சென்றார். ''வீதிக்கு மறுபுறத்திலுள்ள கடைகளைவிடச் சந்தையிலே புதர்கள் மலிவு'' என்று அவர் சொன்னார். இப்புதர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரானில் மிக மிகத் தூரத்திலுள்ள வனாந்தரங்களிலிருந்தே கொண்டுவரப்படுகின்றன. அதனால் நகரத்தில் அவற்றுக்குச் சரியான விலை. இறுதிப் புதன் கிட்டக் கிட்ட விலை ஒவ்வொருநாளும் உயரும்.



நானும் அப்பாவும் சந்தைக்குப் போனபொழுது புதர்—வியாபாரி ஏராளமான புதர்களை வைத்திருந்தான். நீண்ட நேரம் எரியக்கூடிய சில பெரிய புதர்களை நான் விரும்பியதனால் அவற்றின் விலையை அப்பா கேட்டார். வியாபாரி விலையைக் கூறியபோது ''அவ்வளவு அதிகமா?'' என்று அப்பா ஆச்சரியப்பட்டார். ''இல்லை ஐயா அது அதிகமல்ல. நான் வருடத்துக்கு ஒருமுறை மாத்திரம் இவற்றை விற்பனை செய்கிறேன். அவற்றை உங்கள் சிறுவன் எவ்வளவு ஆவலோடு பார்க்கின்றான் என்று பாருங்கள்'' என்றான் புதர் வியாபாரி. நான் புதர்களை ஆவலுடன் பார்த்ததை அப்பா கண்டதும் விலை அதிகம் என்பதையும் மறந்து வியாபாரி கேட்ட தொகையைக் கொடுத்து அப்புதர்களை வாங்கினார்.

புதர்களை வீட்டுக்குக் கொண்டுபோவதற்கு ஒரு சிறு வண்டியை வாடகைக்குப் பிடித்தோம். போகும் வழியில் எனது சிந்தனை வேறு ஒன்றிலும் செல்லவில்லை. புதர்களைக் கொளுத்தி அவற்றுக்கு மேற் பாய்வது பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தேன். 'ஈரானிலுள்ள சிறு பிள்ளைகள் எல்லோரும் இன்று இப்படியாகவே ஆவலோடு இருப்பார்கள்' என்று எண்ணினேன். நாங்கள் வீட்டை அடைந்தபோது எங்களை எதிர்பார்த்துக்கொண்டு அம்மா முற்றத்தில் இருந்ததை நான் காணவில்லை.

''கவனம், காற்று வீசுகின்ற இடத்தில் வைத்துவிடாதே'' என்று கூறி எச்சரித்துப் பாதுகாபபான ஒரு மூலையை அம்மா காட்டினாள். புதர்களைக் கொளுத்துவதற்கு அம்மா சிறிது வைக்கோலும் கூளமும் சேகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்ததைக் கண்டேன்.

பாடசாலை நேரமாகிவிட்டது. நான் பாடசாலை சென்றேன். அன்று வகுப்பறையிலே, புதர்களைப் பற்றியே பகற்கனவு கண்டு கொண்டிருந்தேன். கற்பனைசெய்வதற்கு எவ்வளவு வேடிக்கை! கடைசிப் பாடநேரம் கணக்குத் தராது புதன் தினக் கொண் டாட்டம் பற்றி விளக்கப்போவதாக எமது ஆசிரியர் கூறினர். ஆசிரியரது வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு அவரது முகத்தைக் கவனித்தேன். புதர்களைக் கொளுத்துவது என்று கூறியபோது அவருடைய கண்கள் பளிச்சென்று பிரகா சித்தன.

''எமது மூதாதையர்கள் சொரூஸ்தியர்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தீயை வணங்கினர்கள்'' என்று அவர் கூறினர். ''தீயை விட அவர்கள் வேறு இரண்டு தெய்வங்களிலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். நன்மைக் குரிய ஒரு கடவுளிடத்திலும் தீமைக்குரிய ஒரு கடவுளிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். நன்மைக்குரிய கடவுளினலேயே தீ ஆக்கப்படுகின்றது. இந்தக் கடவுளே எமது சேமத்தைக் கவனித்து அமைதியை நிலைநாட்டுகின்றது. ஆனல் போர், பஞ்சம், நோய் ஆகியன தீமைக்குரிய கடவுளின் செயல் களாகும்.

''எமது மூதாதையர்கள், அதாவது, சொரூஸ்தியர், தீ ஆல யம் எனப்படும் ஓர் ஆலயத்திலேயே வணங்கினுர்கள். இந்த ஆலயத்தினுள்ளே இரவும்பகலும் ஒரு தீ எரிந்து கொண்டிருந் தது. தம் விருப்பங்களைக் கூறி அந்தச் செந்நிறத் தீயை வணங்க மக்கள் அங்கு சென்றூர்கள். அத்தீயின் செந்நிறச் சுவாலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைக்குரிய தெய்வம் இருக்கும் வானத்துக்குத் தமது பிரார்த்தனைகளை எடுத்துச் செல்லும் என்று அவர்கள் நம்பினார்கள்.''

எமது ஆசிரியர் கூறியவற்றைப் பற்றி நான் சிந்தித்தேன். ஆம், தீ நன்மை பயக்கின்றது. அத்துடன் பல தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. தீ இல்லையெனின், குளிர்க் காலத்திலே எமது வீடுகளிலே உஷ்ண நிலையை ஏற்படுத்தவும் முடியாது; சூடான உணவுகளை உண்ணவும் முடியாது. ஆயின் இன்னொருவகையான ஒரு தீயுமுளது. வாயு அடுப்பை நாம் கவனமாகக் கொளுத்தாவிடில் அது வெடித்துக் குசினி முழுவதும் தீ பற்றிவிடும். அம்மாதிரியான நிகழ்ச்சிக்குத் தீய கடவுளே காரணம்.

அப்போது மணி அடித்தது. எனது மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. துள்ளிப்பாய்ந்து பாடசாலைப் பையை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடி வீட்டை அடைந்தேன்.

அப்பா இன்னும் வீட்டுக்கு வரவில்லை. ஆனால் அவர் அதிகம் பிந்தமாட்டார். இந்த விசேட புதனன்று அவர் எப்பொழுதும் வழமையைவிட முந்தி வேலையிலிருந்து வருவார். அவர் திரும்பியதும் புதர் ஒவ்வொன்றுக்கும் மேலாகப் பாய்வதற்கு வேண்டிய இடத்தை விட்டு அவற்றை முற்றத்திலே ஒரு நீண்ட வரிசையில் ஒழுங்கு செய்தோம். பொழுதுபட்டதும் ஒரு நீண்ட பந்தத்தினால் புதர்களைக் கவனமாக கொளுத்தினேன். ஒவ்வொன்றாக அவை உயிர் பெற்று வானத்தை நோக்கி மஞ்சள், பழுப்பு, ஊதா நிறச் சுவாலைகளுடன் எரிந்தன. எனக்குப் பெரும் மகிழ்ச்சி.

முதலில் நானே புதர்களைக் கடந்து பாய்ந்தேன். எனக்குப் பின்னால் அம்மாவும் அப்பாவும் பாய்ந்தனர். நான் விரைவாகப் பாய்ந்த போதிலும் எனது காலிற் சூடுபட்டது. தீச்சுவாலைக்கு எனக்குப் பயம் இல்லை. ஆயினும் நான் மூச்சை அடக்கிக்கொண்டேன். எல்லாப் புதர்களையும் கடந்த பின்னர் சிரித்துக் கைகொட்டிக்கொண்டு அம்மாவும், அப்பாவும் என்னைப் பின் தொடர்ந்து வருகின்றனரோ என்று திரும்பிப் பார்த்தேன். நாங்கள் ஏழு முறை அப்புதர்களைக் கடந்து பாய்ந்தோம். அதன் பின்னர் சுவாலைகளின் வீறு தணிந்தது. சற்று நேரத்தில் தீ சிறிது சிறிதாக அணைந்தது. அத்துடன் முற்றத்திலே மீண்டும் இருள் சூழ்ந்தது. ஆயின் நான் பாடிப் பாடிச் சாம்பரைக் கூட்டி முற்றத்தின் ஒரு மூலையிலே தள்ளினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு சாப்பிடும்போதும், புதர்களுக்கு மேலாகப் பாய்ந்ததை விட வேறு எது பற்றியும் நான் பேசவில்லை.

இப்படியாகவே கடந்த வருடம் நான் இந்த விழாவைக் கொண்டாடினேன். புதர்களை வாங்குவதற்கு அப்பா என்னை நாளைக்குச் சந்தைக்குக் கூட்டிச் செல்லும்வரை காத்திருப்பது மிகவும் கஷ்டம். அடடா! எனது புதுச் சப்பாத்தைத் தீர மறந்து விட்டேனே! கடந்த வருட விழாவைப் பற்றிய இன்பமான சிந்தனையில் எனது சப்பாத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமற் போய்விட்டது. அப்பா எனக்குப் புதுச் சப்பாத்து வாங்கித் தராவிட்டாலும் நாளை நாம் புதர்களைக் கொளுத்தித் தீக்குமேலாகப் பாய்ந்து மகிழ்ச்சியாகப் புத்தாண்டைக் கொண்டாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவைத் தினமும் சிறுவர் தினமும்

வசந்தம் யப்பானியப் பிள்ளைகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற ஒரு காலம். வசந்தத்தில் மரங்கள் தடிகள் செழித்து வளரும்; வர்ண வர்ணப் பூக்கள் மலரும். குளிர் காலத்திலே உஷ்ண பகுதிகளுக்குச் சென்ற பட்சிகள் எல்லாம் திரும்பி வந்துவிடும். இவற்றைவிட, யப்பானியப் பிள்ளைகளை வசந்த காலத்திலே இரண்டு விழாக்கள் காத்திருக்கும். ஒன்று சிறுமியருக்குரிய பாவைத் தினம். அது மார்ச்சு மாதத்தில் வருவது. மற்றது சிறுவருக்குரிய சிறுவர் தினம். அது மே மாதம் வருவது. இந்த இரண்டு விழாக்களும் சிறு பிள்ளைகள் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடப்படும். ஆண்பிள்ளைகள் வீரதீரர்களாகவும், பெண் பிள்ளைகள் அழகு இராணிகளாகவும் வளர வேண்டுமென்று ஒவ்வொரு பெற்ருேரும் விரும்புவதை இந்த விழாக்கள் குறிக்கும்.

வசந்தம் கிட்டிவிட்டதென எந்தப் பட்சி முதலில் அறிந்துகொள்ளுகின்றதென்று உங்களுக்குத் தெரியுமா? யப்பானிய நயிற்றிங்கேல் என்பதே அப்பட்சி. அது இனிமையாகப் பாடிக்கொண்டு, சிறுபிள்ளைகளினுடைய விழாக்கள் விரைவில் வருகின்றன என்பதை அவர்களுக்கு அறிவித்துக்கொண்டு மரத்துக்கு மரம் பறந்துதிரியும். நயிற்றிங்கேலின் இசைகேட்டுப் பிளம் மரங்கூடப் பூக்கும். முற்றத்துப் பிளம் மரங்களில் வெள்ளை அல்லது இளஞ் சிவப்பு மலர்கள் நிறைந்திருக்கும். பீச் மரங்கள்கூட நயிற்றிங்கேலின் பாட்டுக்கேட்டுப் பூக்கும். அப்போது யப்பானியச் சிறுமியர் கினமத்சுறிக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்குவார்கள். Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org ஹினமத்சுறி என்பதே பாவைத் தினத்துக்கு யப்பானில் வழங்கும் பெயர்.

மார்ச்சு 3 ஆம் தேதி வரும் இந்த விழாவுக்குச் சில வாரங்களுக்கு முன்னர், பளபளப்பான பட்டுகளும் இறேந்தைகளும் உடுத்திய 15

சிற்றுருப் பாவைகளை ஒவ்வொரு தாயும் புதல்விகளுக்குக் கொடுப்பாள். இவற்றுள் இராசா, இராணி, சேவகப் பெண்கள், மந்திரிமார், அரசவைச் சங்கீத வித்துவான்கள், பசப்பர் ஆகிய பாவைகள் இருக்கும். தான் வைத்திருந்த பாவைகளையிட்டுத் தாய் பெருமைப்படுவாள். ஏனெனில் இப்பாவைகள் பல ஆண்டுகளுக்கு முன்னே, அவள் சிறுமியாக இருந்தபோது அவளுடைய தாயாலே கொடுக்கப்பட்டனவாகும்.

தாய், பாவைகளை மரப்பெட்டிகளிலிருந்து எடுத்துத் துடைத்துக்கொடுப்பாள். அவை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபடிகளையுடைய ஒரு விசேட பீடத்தில் வைக்கப்படும். விழா முடியும் வரை அவை அப்படியே இருக்கும. பாவைகள் அழகாகத் தோன்றவேண்டுமென்பதற்காகப் பீடத்திலே அழகான சிவப்பு நிறத்துணி விரிக்கப்படும்.

பீடம் தயாரானதும் சிறுமிகள் பாவைகளை அதிலே வைப்பார்கள். இராசாவும், இராணியும் முதலாம் படியில் ஒரு சிறிய தங்க நிறத் திரைக்கு முன் வைக்கப்படும். இவற்றின் இரண்டு பக்கங்களிலும் சிறிய விளக்குகள் வைக்கப்படும். இராசா இராணிக்குப் பணிபுரிவதற்காக இரண்டாம் படியில் மூன்று பணிப்பெண்கள் வைக்கப்படுவார்கள். அடுத்ததாக அரசவைச் சங்கீத வித்துவான்கள் ஐவரும், மந்திரிமார் இருவரும். பசப்பர்கள் மூவரும் வைக்கப்படுவார்கள். பசப்பர்களுக்கு இரு பக்கத்திலும் வைப்பதற்காகத் தாய் ஒரு சிறிய தோடை மரமும், செறி மரமும் கொடுப்பாள்.

கடைசிப் படி தவிர ஏனைய படிகள் அலங்கரிக்கப்பட்டதும் இன்னொரு மரப்பெட்டியைத் திறந்து தாய் பல சிற்றுருத் தளபாடங்களை எடுப்பாள். பாவைகளுக்குத் தேவையான தளபாடம் எல்லாம் அவற்றுள் இருக்கும். மாற்று உடுப்புகளுள்ள ஓர் அலுமாரி, இராணிக்கு ஒரு நிலைக் கண்ணுடி, வேறு சில கண்ணுடிகள், அலங்காரத் தட்டுக்கள், குமிழ்கள், ஒரு தையற் பெட்டி, நூல்கள் நிறைந்த ஒரு சிறிய இருக்கை ஆகியனவும், இராசா இராணி பிரயாணஞ் செய்வதற்கு ஒரு வண்டியும் அங்கு காணப்படும்.

தமது கண்கவரும் அலங்காரத்தைப் பார்த்துப் பார்த்துச் சிறுமியர் ஆனந்தமடைகின்றனர்கள். ஆனல் மார்ச்சு 3 ஆம் தேதிவரை விழாவை ஆரம்பிக்க முடியாதென்று தாய் கூறுவாள். அன்று பாவைகளுக்கு ஒரு தேனீர் விருந்தளிக்கப்படும்.

கொண்டாட்டத் தினத்தன்று, ஒரு பெரிய தட்டு நிறைய இளஞ்சிவப்புப் பீச் மலர்களை எடுத்துப் பீடத்துக்குப் பக்கத்தில் தாய் வைப்பாள். அதன் பின்னர் உண்பதற்குச் சுவையான பல பதார்த்தங்களைக் கொடுப்பாள். பச்சை, வெள்ளை போன்ற பல நிறங்களிலே செய்யப்பட்ட பலகாரங்கள், பொங்கல், சிறிது பால் ஆகியவற்றுடன் வைன்கூட இருக்கும்.

சாயந்தரம், சிறுமியர் தமது பாவைகளை வைத்து ஆடிப்பாடி மகிழ்வார்கள். அவர்கள் தாங்கள் சாதாரணமாக வைத்து விளையாடுகின்ற பாவைகளையும் தேநீர் விருந்துக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டு வருவார்கள். தேநீர் விருந்து மிகவும் வேடிக்கையாக இருக்கும். சிறுமியர் பாவைகளுக்குப் பாடிக்காட்டுவார்கள்; அவற்றுடன் சேர்ந்து விளையாடுவார்கள்; உண்டு குடிப்பார்கள்! பொழுது படுகின்றது. ஆனால் தேநீர் விருந்து இன்னும் சற்றுநேரம் நடப்பதற்காக, முதற் படியிலுள்ள இரண்டு விளக்குகளையும் கொளுத்தும்படி தாய் கூறுவாள். பாவை தினம் வருடத்தில் ஒருமுறை மாத்திரமே வருவதனால் வழமையைவிட அதிக நேரம் சிறுமியர் விளையாட விடப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர்கள் இந்த விழாவிற் பங்குபற்றுவதில்லை. சிறுவர் தினம் மே 5 ஆம் தேதி வரும் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்போது, மரஞ்செடிகொடிகளெல்லாம் பச்சைப் பசேலென்று இருக்கும்; எங்கும் மென்மையான பசும் புற்கள் வளர்ந்திருக்கும்; வயல்களில் இறுங்குப் பயிர் ஓங்கி வளர்ந்திருக்கும்; வானம் நாள் முழுவதும் நீல வர்ணமாகப் பிரகாசித்துக்கொண்டு இருக்கும். மே மாதம் சூரியன் உயர இருப்பதனால் அது சிறுவர்கள் வெளியிலே விளையாடுவதற்கு உகந்த காலமாக இருக்கும்.

விழாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர், நீண்ட வைரமான ஒரு மூங்கிற் கம்பத்தைத் தகப்பன் முற்றத்திலே நாட்டுவார். கம்பத்தின் உச்சியில் தாள் காற்றாடி ஒன்று இருக்கும். அது காற்றிலே சுழலும்போது ஒரு மெல்லிய ஓசை கேட்கும். காற்றாடிக்குக் கீழே கயிற்றுக் கப்பி ஒன்று இருக்கும். சிறுவர் தினத்தின் சின்னமான மீன் கொடிகளை உயர்த்துவதற்கு அது பயன்படும்.

வருடம் முழுவதும் வீட்டுக்குள்ளே பாதுகாப்பாக வைத்திருந்த மீன் கொடிகளைச் சிறுவர்கள் எடுக்கின்றார்கள். இக்கொடிகள் பலமான துணிகளினாற் செய்யப்பட்டவை. இவை காற்றுப் பைகள் போல் இருக்கும். பளபளப்பான வர்ணங்களிலே இவற்றில் மீன்கள் வரையப்பட்டிருக்கும். மீன்கள் பல்வேறு அளவுகளில் வரையப்பட்டிருக்கும். மிகப்பெரிய மீன் வழமையாகக் கம்பத்தின் உச்சியிற் கட்டப்படும். சிறியவை அதற்குக் கீழேயே கட்டப்படும்.

கொடிகளைக் கயிற்றிற் கட்டுவதற்காகச் சிறுவர் வெளியே வந்துள்ளார்கள். முதலாவதாகப் பெரிய கறுப்புக் கொடியைக் கட்டுகின்றார்கள். அடுத்துச் சிவப்பு நிறமானதைக் கட்டுகின்றார்கள். கடைசியாக மிகச் சிறிய சிவப்புக் கொடியைக் கட்டுகின்றார்கள். சில வேளைகளில் ஆறு அல்லது ஏழு கொடிகள் பறக்கவிடப்படும். பழைய காலத்தில், குடும்பத்திலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கையளவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோரணங்கள் பறக்கவிடப்பட்டன. சிற்றுருப் பாவைகள் பரம்பரை வழிவருவது போலவே, இக்கொடிகளும் பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வருகின்றன.

எல்லாக் கொடிகளும் கயிற்றுடன் கட்டப்பட்டுவிட்டன. சிறுவர்கள் தங்களுடைய முழுப் பலத்தையும் கூட்டிக் கயிற்றை இழுக்கின்றார்கள். கொடிகளை உயர்த்த உதவி செய்வதற்குச் சிறுவர்களுடைய தகப்பனார் வருகின்றார். கொடிகள் உயர்ந்துயர்ந்து செல்லுகின்றன. சிறுவர்கள் மேலும் மேலும் பலமாக இழுக்கின்றார்கள். திடீரென ஒரு மகிழ்ச்சிக் குரல்! கறுத்த மீன் கொடி கம்பத்தின் உச்சியை அடைந்துவிட்டது. இப்போது எல்லா மீன்களும் காற்றிலே பறக்கின்றன. மீன்களின் வாய்கள் திறந்திருக்கின்றன. அதனால் காற்று உள்ளே சென்றதும் மீன்கள் ஊதி வாலை அடித்துக்கொண்டு மேல்நோக்கி நீந்துகின்றன. அவை உயிர் மீன்கள் போலவே காற்றில் மிதக்கின்றன.

மீன்கள் காற்றிலே துள்ளிப் பறப்பதும், அந்தச் சிறிய காற்றுப்பு அவற்றுக்கு மேலே இசை பாடுவதும் சிறுவருக்குப் பெரும் மகிழ்ச்சி. நீலவானிலே தோரணங்கள் எவ்வளவு பளபளப்பாகவும் அழகாகவும் இருக்கின்றன!

வீட்டுக்குள்ளே, வரவேற்பு அறையிலுள்ள சிறிய மாடத்திலே சிறுவர் தினத்துக்குரிய விசேட அலங்காரங்களைத் தகப்பனார் செய்து கொண்டிருக்கிறார். மாடத்துக்கு இரு பக்கமும் குடும்பத்துக்குரிய இலாஞ்சனை பொறிக்கப்பட்ட கடதாசி விளக்குகளை வைக்கின்றார். மாடத்திலுள்ள ஒரு விசேடமான படியிலே அம்பு, வில்லு, ஈட்டி, போர்க்கவசம், போர்க்குதிரை போன்றவற்றை வைக்கிறார். இவை பண்டைக் காலப் போர்வீரர் கையாண்ட போர்க் கருவிகளாகும். கீழ்ப் படியிலே, சில சிற்றுருப் பாவைகளையும் பண்டைக் காலத்தில் போரில் மடிந்த வீரதீரர்களது உருவங்களையும் வைக்கின்றார். அந்த வீரர்களைப் போலவே தாமும் அஞ்சாநெஞ்சர்களாக வளரவேண்டுமென்பது சிறுவர்களுடைய விருப்பம். அதுவே பெற்றோரின் விருப்பமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சிறுவர்களுக்கு ஒரு விசேட விருந்து கிடைக்கும். ஓக் மர இலைகளிற் சுற்றிய சுவையான அரிசிப் பலகாரங்களும், பாற் சோற்றில் செய்து மூங்கில் இலைகளில் சுற்றிய வட்டமான சிறிய யப்பான் பலகாரங்களும் அவர்களுக்குக் கிடைக்கும். இன்று

முழுவதும், கம்பீரமாகக் காற்றிலே பறக்கின்ற மீன் கொடிகளையும் வீட்டுக்குள்ளே மாடத்தில் வைக்கப்பட்டுள்ள பொருள்களையும் காணும்போதெல்லாம் சிறுவர்களுடைய உள்ளத்திலே பெருமிதம் பொங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வங்காளப் புத்தாண்டு

மினுவினுடைய படுக்கை அறையின் யன்னல் திறந்திருக்கின்றது. அதனூடாக ஓர் ஒளிக்கற்றை அறையினுள்ளே பாய்கின்றது. இளங்கதிரவனுடைய வெப்பம் மினுவின் கண்களில் பட, அவள் கண்களைத் திறந்து தன்னுடைய அறையில் வழமையாகத் தூங்குகின்ற தன்னுடைய சகோதரன் மொன்ருவைத் தேடுகின்றாள். மொன்ரு கட்டிலில் இல்லை. வினோதமாக இருக்கிறதே! மொன்ரு எங்கே?

குயில் இனிமையாகப் பாடுவது மினுவுக்கு யன்னலுக்கூடாகக் கேட்கின்றது. மினு மறந்துவிட்ட ஒரு விடயத்தை நினைவூட்டுவதற்காக குயில் பாடுகின்றதா?

''ஆமாம், உண்மை! இன்று புத்தாண்டு தினம்!'' என்று மினு வியப்புடன் கூறுகின்றாள். அவள் எப்படி இந்த நாளை மறப்பாள்? அதுவே வைசாகத்தின் முதல் நாள். வைசாகம் என்பது ஏப்பிறலில் ஆரம்பமாகும் இந்துப் பஞ்சாங்கத்தின் முதல் மாதமாகும். இன்று, எல்லாப் பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கும். எவரும், மினுவினுடைய தந்தையார் கூட, வேலைக்குப் போகமாட்டார்கள். ஆம்! இன்று ஓர் இன்பமான நாள்.

மினு கட்டிலைவிட்டுப் பாய்ந்து தாயுடைய அறைக்குள் ஓடுகின்றாள். ''ஏன் மினு நீ இன்று எழும்புவதற்குப் பிந்திவிட்டாய்?'' என்று தாய் வினவுகிறாள்.

தாய் பேசி முடிப்பதற்கு முன்னமே மினு முற்றத்துக்குப் போய்விட்டாள். அங்கே மொன்ரு அவனுடைய சில நண்பர்களுடன் மாலைகள் செய்வதற்குப் பூப்பறித்துக் கொண்டு நின்றான். ஒவ்வொரு சிறுமியும் புத்தாண்டுத் தினத்தன்று பூ மாலைகள் அணிந்து கொள்ளுவாள். ''இந்த வருடம் எவ்வளவு அழகான மலர்கள் இருக்கின்றன'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினு தனக்குள் சொல்லுகின்றாள். அவள் விரைந்து சென்று மொன்ருவுடனும் அவனுடைய நண்பர்களுடனும் சேர்ந்து முற்றத்திலிருந்த சிவப்பு ஓலியாண்டர், வெள்ளை டெய்சி, செந்நிற ரோசா, ஊதா நிற கிபிஸ்கஸ், மஞ்சள் மறிகோல்ட் ஆகிய மலர்களைப் பறிக்கின்றாள்.

கடந்த வருடம் மினுவும் மொன்ருவும் அவர்களுடைய பேரன் பேர்த்தியினுடைய நாட்டுப்புற வீட்டிலே புத்தாண்டை மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடினார்கள். புத்தாண்டு விருந்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினரை வரவேற்கும் சின்னமாக வாசற்படிகளிலே கிராமப் பெண்கள் போட்டிருந்த கோலம் இன்றும் மினுவுக்கு ஞாபகமாக இருக்கின்றது. அன்று சாப்பிட்ட சுவையான அரிசிப் பலகாரங்களும் அவளுக்கு ஞாபகம். சில பூக்கள் போல இருந்தன. சில நீர் செஸ்நட் மரங்கள் போல இருந்தன. சில பலகாரங்களுக்குள்ளே பாகும் சிலவற்றுக்குள்ளே தேங்காய் உள்ளுடனும் வைக்கப்பட்டிருந்தன. அவை எல்லாவற்றுக்கும் அழகான பெயர்கள். அவற்றைத் தான் மறந்துவிடக்கூடும் என்று எண்ணிய மினு அப்பெயர்களைத் தனது டயறியிலே குறித்துக்கொண்டாள்.

சிறுவர்கள் கை நிறைய மலர்களைப் பறித்துக் கொண்டதும், அவர்களைத் தனக்குப் பின்னே ஒரு வரிசையில் நிற்குமாறு மொன்ரு சொன்னான். அதன்பின் அவன் வீரநடைபோட்டு நடந்தான். அவனுக்குப் பின்னே ஒவ்வொருவரும் ''புத்தாண்டு மீண்டும் மீண்டும் வரட்டும்'' என்று பாடிக்கொண்டு அணிவகுத்துச் சென்றனர். வீதிகளில் திரும்பித்திரும்பி நடந்தார்கள். இந்தச் சிறிய ஊர்வலம் எல்லோருக்கும் வேடிக்கையாக இருந்தது.

பாட்டு முடிந்ததும் மினுவும் மொன்ருவும் மாலைகளைக் கோப்பதற்காக வீடு திரும்பினார்கள். மினு மலர்களைக் கோத்துக் கொண்டு இருக்கும்போது, அவர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறுவதற்குப் புத்தாண்டுப் பலகாரங்களுடன் பலர் வந்தார்கள்.

வெளியே சென்று கடைகளைப் பார்ப்பதற்குச் சிறுபிள்ளைகள் ஆவலோடு இருந்தார்கள். புத்தாண்டுத் தினம் கடைக்காரருக்கும் முக்கியமான ஒரு நாள். ஏனெனில், பழைய ஆண்டுக் கணக்குகளை எல்லாம் தீர்த்துவிட்டு, மலர்களாலும் கொடிகளாலும் கடைகளை அலங்கரித்து வைத்திருப்பார்கள்; கடைக்குவரும் சிறுவர்களுக்கு மிட்டாய்கள் கொடுப்பார்கள்.

விருந்தினர் எல்லோரும் சென்ற பின்னர், மினுவினுடைய தாய் புத்தாடைகள் அணிந்து கொண்டு புறப்பட்டாள். அவளுடைய ஆடைகள் சிவப்பு நிறத்திலும் மஞ்சள் நிறத்திலும் இருந்தன. ஏனெனில் அவையே வசந்தத்துக்குரிய நிறங்கள். மினு தாயாருடைய கூந்தலில் ஒரு மறிகோல்ட் மலரைக் குத்திவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு விசேட புத்தாண்டு நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு அவர்கள் அரங்குக்குச் சென்றார்கள். மொன்ரு காற்பந்தாட்டம் பார்க்கப் போவதற்கு விரும்பினான். மினு புத்தாண்டு இசை நிகழ்ச்சிக்குப் போக விரும்பினாள். ஆனால் ஈற்றில், நடனம் பார்க்கப்போவதாகத் தாய் தீர்மானித்

தாள். நடனத்திற்குரிய கதை ''பாட்டியின் பொதி'' எனும் பிரபலமான கட்டுக்கதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட ஒன்று. இரு பிள்ளைகளும் அதனை நன்கு விரும்புவார்கள் என்பது மினுவின் தாயாருக்கு நன்கு தெரியும்.

அவர்களுடைய தகப்பனார் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டு அரங்கத்தில் இருந்தார். அவர்கள் அங்கே சென்றபோது கட்டடம் பல்வேறு நிற வெளிச்சத்திலே பிரகாசிக்கக் கண்டார்கள். மண்டபத்தினுள்ளே எங்கும் மலர்கள். மேடையிலுமே மலர்கள். மினு அவளுடைய நண்பர்கள் பலரைக் கண்டாள். அவர்கள் எல்லோரும் மாலைகளை அணிந்திருந்தார்கள். அவளுடைய தகப்பனார் எங்கே? அவள் சுற்றுமுற்றும் பார்க்கிறாள். அதோ அவர் அங்கே நிற்கின்றார்!

மற்றப் பிள்ளைகளினுடைய தந்தையர்களைப்போலவே மினுவினுடைய தகப்பனாரும் வெள்ளை நிறக் கால்சட்டையும் பட்டுக் 'கேடாச் சேட்டும்' அணிந்திருந்தார். மற்றும் தாய்மார்கள் அணிந்திருந்த உடைகளும் சிவப்பும்மஞ்சளுமாகவே இருந்தன. வெளிச்சம் அணைக்கப்பட்டதும் நடனம் ஆரம்பமானது. மினுவும், மொன்ருவும் பிரகாசமான வெளிச்சங்களையும், வர்ண வர்ண நிறங்களையும் நடனக்காரரையும் கண்டு பிரமித்துப் போயிருந்தனர். இதனால் இரண்டு மணிநேரம் ஒரு நொடிப் பொழுதில் பறந்துவிட்டது.

நடனத்துக்குப் பின்னர் இன்னுமொரு விடயம் இருந்தது. அதாவது புத்தாண்டுச் சந்தை. அதுவே, புத்தாண்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத் தினத்தின் மிகப்பெரிய நிகழ்ச்சி. ''விரைவாக வாருங்கள்! விரைவாக வாருங்கள்!'' என்று சிறுவர்கள் பெற்றோரை மன்றாடினார்கள்.

சனக்கூட்டத்துக்கூடாகக் கடற்கரையை நோக்கி அவர்கள் சென்றார்கள். கடற்கரையிலேயே ஒவ்வொரு வருடமும் சந்தை நடக்கும். கடற்கரையை அடையும் முன்னரே சனத்திரளின் இரைச்சலும் கும்மாளமும் அவர்களுக்குக் கேட்டன. அங்கே சென்றதும் மினு ஆச்சரியம் தாங்கமுடியாமல் சத்தமிட்டாள். எவ்வளவு பாவைகள்! மிருகங்கள்! பழங்கள் தான் எவ்வளவு!

மெரி-கோ-றவுண்ட் நடக்கிற இடத்துக்குப் போனதும் பிள்ளைகள் சவாரி போக விரும்பினார்கள். மேலும் கீழுமாகவும், வட்டம் வட்டமாகவும் அவர்கள் குதிரைகளிலே சென்றார்கள். ஆம்! இந்த உலகம் முழுவதுமே சுழலுகின்றது. எவ்வளவு வேடிக்கை! வித்தைக்காரனுடைய கூடத்தைக் கண்டதும் அவனுடைய வித்தைகளைப் பார்ப்பதற்கு அவர்கள் சற்று நின்றார்கள்.

மந்திரவாதி ஒரு பெண்ணை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளே இருத்துகின்றான். இப்போது அவளுடைய தலையைச் சீவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போகின்றான். ஒன்று, இரண்டு, மூன்று! தலை பறக்கிறது! மினாவும் மொன்றாவும் திடுக்கிட்டுப் போனார்கள். ஆனால் மந்திரவாதி ஒரு பெரிய துணியினால் அப்பெட்டியை மூடிவிட்டு ஒரு சிறு மந்திரத்தைச் சொல்ல அந்தப் பெண் தலையோடு எழும்புகின்றாள்.

நேரம் ஏறக்குறைய நள்ளிரவாகிவிட்டது. வீடு திரும்பி எல்லோரும் நித்திரை செய்யச் சென்றார்கள். படுக்கை அறையின் யன்னலுக்கூடாக மினா வானைப் பார்த்தாள். கடும் மழை கருக்கட்டிக்கொண்டிருந்தது. வைசாக மாதத்தில் கடும் மழையும் புயல்காற்றும் ஏற்படும் என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் தொல்லை கொடுக்கக்கூடியவளவு பெரிய புயலாக அது தோன்றவில்லை. ''புத்தாண்டு ஸ்நானத்தின் பின்னர் நாடு முழுவதும் சுத்தமாக இருக்கும்'' என்று எண்ணியபடி அவள் தூக்கத்திலாழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீர் விழா

பர்மாவில் தண்ணீர் யாராலும் விரும்பப்படும் ஒன்று! வீதியின் மறு பக்கத்தைப் பார்க்கமுடியாதளவுக்குப் பருவ மழை கொட்டும் போது எமக்குப் பேரானந்தம். மழைக்குப் பின்னர் மரங்கள் தடிகளெல்லாம் ஓங்கி வளர்ந்து பச்சைப் பசேலென்று இருக்கும். அவை எவ்வளவு சீக்கிரமாக வளருகின்றன என்பதை நீங்கள் கண்ணுல் பார்த்தால்தான் நம்புவீர்கள். கவனமாகக் காதைக் கொடுத்துக்கேட்டால், தாவரங்கள் வளருகின்ற சத்தம் கேட்குமெனச் சிலர் சொல்லுவார்கள்.

நாளாந்தம் எமக்குத் தண்ணீர் அத்தியாவசியம் என்பதனுலும் நாம் தண்ணீரை விரும்புகின்றேம். எமது தேகத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், ஆடை அணிகளைத் தோய்த்துத் துவைப்பதற்கும் நாம் சமையல் செய்வதற்கும் தண்ணீர் தேவை என்பது சிறு பிள்ளைகளுக்குமே தெரியும்.

எமது உணவுக்குத் தேவையான நெற்பயிர் வளர நீர் தேவை என்பது உங்களுக்குத் தெரியுமா? நெல்லு நாற்றுக்களை நடும்போது வயல்களிலே போதிய நீர் இல்லையானுல் அவை வளரமாட்டா. அதனுல் நாம் சாப்பிடுவதற்குப் போதிய அரிசி கிடைக்கமாட்டாது.

எமக்குத் தண்ணீர் மிக முக்கியமானது என்றதனுல் எமது மிகப்பெரிய விழாவை நாம் தண்ணீர் கொண்டே கொண்டாடுவோம். இதுவே திங்கியன் எனப்படும் விழா. திங்கியன் என்பது ஒரு பர்மியச் சொல்லு. 'மாறுதல்' என்பது அதன் கருத்து. திங்கியன் உண்மையில் ஒரு மாற்றமேயாகும். இந்த விழா பழைய ஆண்டின் முடிவையும் புதிய ஆண்டின் ஆரம்பத்தையும் குறிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெட்ஜூட் மரத்திலே மலரும் மஞ்சட் பூக்கள் திங்கியன் கிட்டிவிட்டதென்பதற்கு அறிகுறி. வீதியிலே 'ஒசி' மேளக்காரருடைய இனிய டப்-டப்-டப் சத்தம் கேட்கிறது. திங்கியன் வந்துவிட்டது. வருடச் சிலை

நீராட்டு விழாவுக்காக மேளகாரர் கோவில்களுக்குச் செல்லுகின்றூர்கள். மேளகாரரைப் பின்தொடர்ந்து ஆடிப்பாடிச் செல்வதற்காக அம்மா, அப்பா, தம்பி, தங்கைச்சி, அண்ணன், அக்கா எல்லாரும் வீதிக்கு ஓடுகின்றேம்.

ஏப்பிறல் மாதம் பர்மாவில் மிக வெப்பமாக இருக்கும். பருவ மழை ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு போறணைக்குள் இருப்பதுபோலவே இருக்கும். எந்தப் பக்கம் அசைந்தாலும் வெப்பம். அப்போது எனது எண்ணம் எல்லாம் தண்ணீரைப் பற்றியே இருக்கும். சில்லென்று குளிரும் தண்ணீர் எனது முதுகிலிருந்து விழுவது பற்றியே கற்பனை செய்வேன். குளிர்ந்த நீர் தேகத்தில் விழுவது எவ்வளவு இன்பமாக இருக்கும்!

திங்கியன் விழாவின் ஆரம்பம் பின்வருமாறு. ஒருநாள் முழுவதும் தண்ணீர் கொண்டு ஒருவர் மேல் ஒருவர் வீசுவோம். எமக்குப் பழக்கமில்லாதவர்களுக்குமே நாம் தண்ணீர் வீசுவோம். இது ஒரு விசித்திரமான வழக்கமாக உங்களுக்குத் தோன்றக்கூடும். இது உண்மையிலே எமக்கு ஒரு இன்பமான காலம் என்பதனுல் இது பற்றி மேலும் விளக்கமாகக் கூறுகின்றேன்.

தண்ணீர் எமக்கு எல்லா நற்பொருள்களையும் நற்சிந்தனைகளையும் குறிக்கும் ஒரு பொருள். கடந்த காலச் செயல்கள் எல்லாவற்றையும் தண்ணீர் கழுவித் தள்ளிவிடுகின்றது. எனவே புத்தாண்டினைப் புனிதமாக ஆரம்பிக்கின்றேம். ஒரு நண்பனுக்கு எனது அன்பையும் நல்லாசிகளையும் எடுத்துக்காட்டும் பொருட்டு ஒருவாளி நீரைவீசி என்னுல் முடிந்தளவு அவனை நான் நனைத்துவிடுகின்றேன். நான் தண்ணீர் வீசும் போதெல்லாம் ''இந்தக் குளிர்ந்த நீரிலே நனைந்து போவீர். புத்தாண்டு இந்த நீர்போன்று இன்பமாக இருக்கட்டும்'' என்று கூறுவேன்.

தலைநகரான இறங்கூனில் வசிக்கின்ற நாம் திங்கியன் காலத்தில் உண்மையிலே பாக்கியசாலிகள். ஏனெனில், எமக்குப் போதிய நீர் கிடைக்கின்றது. இந்நகரத்திலே அதிகமான நீர் வீசப்படுவதனுல் திங்கியன் ''பெரு வெள்ளம்'' என்று கூறப்படுகின்றது. வீதிகள் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். பிரமாண்டமான தொட்டிகளிலிருந்து பாதையில் செல்பவர்கள் மேல் மக்கள் நீர் வீசுவார்கள். தண்ணீர்க் குழாய்கள் திறந்திருக்கும் ''ஹோஸ்'' குழாய்கள் நாலா பக்கமும் சுழலும். நகரம் ஒரே குதூகலமாக இருக்கும். அதனுல் ஒருவரும் வீடுகளில் இருக்கமாட்டார்கள். திங்கியன் காலத்திலே நீங்கள் வீதிவழியே நடந்து செல்ல நேர்ந்தால் நனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது வீடு வருவீர்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே உங்களுடைய நல்ல ஆடைகளை அணிந்து கொண்டு செல்லக் கூடாது.


பர்மாவின் மத்திய பகுதியிலே பருவ மழை இன்னும் ஆரம்பமாகவில்லை. அதனால், நிலம் இன்னும் காய்ந்து வரண்டே இருக்கின்றது. எனவே தண்ணீரைக் கொஞ்சமாகவே எல்லோரும் பிரயோகிக்கவேண்டும். அங்குள்ள சிறு பிள்ளைகளை எண்ணி நான் வருத்தப்படுகின்றேன். ஏனெனில், விழாக் காலத்தில் இவர்கள் வெள்ளிக் கிண்ணங்களில் மாத்திரமே நீர் வைத்திருப்பார்கள். அதிலே சில துளிகளை ஒரு தடியால் ஒருவர்மேல் ஒருவர் தெளிப்பார்கள். இறங்கூனில் இருக்கின்ற எங்களைப்போல அங்கே எவரும் நனைவதில்லை. ஆனால் அவர்கள் எல்லோரும் இந்த விழாவைப்பற்றி நன்கு அறிவார்கள். அதனாலே ஒரு வாளி நீர் முழுவதும் தங்கள் மேல் வீசப்பட்டதாக அவர்கள் கற்பனை செய்துகொள்ளுகின்றனர். ஒரு சிறுமி மேல் சில நீர்த்துளிகளைத் தெளித்ததும், அவள் ஆச்சரியத்துடன் ''அம்மா நான் நன்றாக நனைந்துவிட்டேன்'' என்று சத்தமிட்டுக் கூறுவாள்.

அரகன் மாவட்டத்திலே நீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்துக்கொள்ளுவதற்காகச் சிறுவர்களும், சிறுமிகளும் திங்கியன் காலத்திலே ஒரு புது மாதிரியான விளையாட்டு விளையாடுவார்கள். நீர் நிரப்பப்பட்ட தோணி ஒன்றுக்கு இரு பக்கமும் அவர்கள் வரிசையாக நிற்பார்கள். ஒரு சிறுமி ஒரு வெள்ளிக்கிண்ணத்தினை அத்தோணியில் வைத்து நீர் எடுத்து அது முழுவதையும் ஒரு சிறுவன்மேற் கொட்டுவாள். அவளுக்கு அடுத்து நிற்கின்ற சிறுமியும் அப்படியே செய்வாள். வரிசையிலுள்ள ஒவ்வொரு சிறுமியும் இப்படியாகச் செய்வாள். அதன்பின்னர் சிறுவர்கள் தொடங்குவார்கள். முதலாவதாக, தமது நல்வாழ்த்துக்களைக் கூறுவதற்குச் சிறுமிகளிடம் அனுமதி கேட்பார்கள். சிறுமிகள் 'ஆம்' என்று சொல்லுதல்வேண்டும். 'ஆம்' என்றதும் இருவரும் நீரில் தோய்ந்து விடுவார்கள். இக்காலத்திலே ஒருவருக்கும் தடிமல் வரமாட்டாது. எல்லோரும் ஆடிப்பாடி மகிழ்வார்கள். இது எல்லோருக்கும் இன்பமான ஒரு காலம்.

பர்மாவின் மத்திய பகுதியிலுள்ள மண்டலே எனும் நகருக்கு நான் ஒரு காலமுஞ் செல்லவில்லை. அங்கும் இக்காலத்திலே மழைநீர் குறைவாகவே இருக்கும். அங்குள்ள சிறுபிள்ளைகள் திங்கியனை வேறுவிதமாகக் கொண்டாடுவதாகக் கூறப்படுகின்றது. பாட்டுப் போட்டிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையான நாட்டுக்கூத்துகளையும் அவர்கள் நாள் முழுவதும் பார்ப்பார்களாம். சாயந்தரம், சங்கீத நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர், பிரதான வீதியிலே அலங்கரிக்கப்பட்ட தோணிகளின் கண்காட்சி நடக்கும். இந்தக் கோலாகலமான காட்சியைப் பார்ப்பதற்கு ஒருமுறை அங்கு நான் செல்வேன் என்பது எனது நம்பிக்கை.

இப்படியாகவே திங்கியன் விழாவின் முதலாவது தினத்தை நாம் கழிப்போம். அடுத்த நாள் காலை, கழுவிச் சுத்தஞ்செய்யப்பட்ட கோவில்களுக்கு வணங்குவதற்குப் போவோம். இறங்கூன் நகரம் முதல்நாளைவிட முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படும். ஏனெனில், பயபக்தியுடன் மக்கள் கோவிலகளுக்குச் சென்றுகொண்டிருப்பார்கள். எளியார் வறியார்க்கு பணம் கொடுப்போம். சிலவேளைகளில், சிறுவர்களைப் பௌத்த சங்கத்திலே சேர்க்கும் விசேட வைபவமொன்று நடக்கும். அதன் பின்னர் எமக்கு நல்வாழ்வு வேண்டுமென வணங்குவோம். திங்கியன் நாட்களிலே போதிய நீர் கிடைத்ததா இல்லையா என்பது முக்கியமன்று. அதன் தத்துவமே முக்கியமானதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அங்கோரில் புத்தாண்டு

கமர் குடியரசில் புத்தாண்டினை நாம் ஏப்பிறல் 12 ஆம் தேதி கொண்டாடுவோம். மூன்று நான்கு நாட்களுக்கு நாடு முழுவதும் மக்கள் பற்பல விளையாட்டுக்களை விளையாடுவார்கள். என்ஞல் அவற்றைக் கணக்கிட்டுக் கூறமுடியாது.

இடதுபக்கத்திலே தெரிகின்ற வளர்ந்த மரக்கூடலுக்கூடாகப் பார்த்தீர்களேயாஞல் ஒரு சிறுவர் கூட்டம் விளையாடிக்கொண்டு நிற்பதைக் காண்பீர்கள். அவர்கள் ஏதோ ஒரு நல்ல விளையாட்டு விளையாடுகிருர்கள். ஏனெனில் மேலும் மேலும் பலர் அங்கே கூடுகின்ருர்கள். நாங்களும் போவோமா?

சிறுவர் ஒரு வரிசையாகவும். அவர்களுக்கு எதிரே சிறுமிகள் ஒரு வரிசையாகவும் நிற்கின்ருர்கள். இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் நோக்கி நிற்கின்றனர். சிறுமிகளுள் ஒருத்தி துணிப் பந்து ஒன்றைச் சிறுவரை நோக்கி வீசுகின்ருள். சிறுவர்கள் அந்தப் பந்தினைப் பிடிப்பதற்குத் துள்ளிப் பாய்ந்து தள்ளுப்படுகின்றனர். அவர்களுள் வளர்ந்த பையன் அந்தப் பந்தினை எடுத்துக்கொள்ளுகிருன். அவன் அதனைக் கையிற் கொண்டு, சிறுமிகள் பக்கம் ஓடுகின்ருன். ஒரு சிறுமிக்குப் பின்ஞல்நின்று, அந்தப் பந்தால் அவளுடைய பிட்டத்தில் இறுக்கி அடிக்கிருன். அவள் வேதனைப்படவில்லை. அவள் அழவுமில்லை. அவளுடைய முறை அடுத்ததாக வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையன் பந்தினை அவளுடைய காலடியிற் போட்டுவிட்டுத் தன்னுடைய பக்கம் திரும்பி ஓடுகிருன். சிறுமி அந்தப்பந்தினை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் தான் விரும்பிய ஒரு சிறுவனுக்குப் பின்னே நின்று தன்ஞல் முடியுமான அளவுக்கு இறுக்கி அவனுடைய பிட்டத்தில் அடிக்கிருள். பார்த்துக்கொண்டு நிற்கின்றவர்கள் சிரித்துக் கைகொட்டுகின்ருர்கள்.

ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கின்றது. இந்த முறை சிறுவர் பந்தைவீசச்



சிறுமிகள் அதனைப் பிடிப்பதற்குப் பாய்கின்றார்கள். பார்த்துக்கொண்டு நிற்கின்றவர்கள் இடைக்கிடையில் கரகோஷம்செய்து ஊக்கமளிக்கின்றார்கள். விளையாடுகின்றவர்களுக்கு மிக அண்மையில் நிற்கின்ற ஒரு வாலிபனுடைய பிட்டத்தில் பலமான ஓர் அடிவிழுகின்றது. அவன் திரும்பிப் பார்க்கின்றான். ஆனால் பிந்திவிட்டது. அடித்த சிறுமி பந்தினை அவனுடைய காலடியிற் போட்டுவிட்டுத் தன்னுடைய பக்கம் ஓடிவிட்டாள். அந்த வாலிபன் அந்தப் பந்தினை எடுத்துக்கொண்டு, கூட்டத்தவர்கள் எல்லோரும் அவனைப் பார்த்தவண்ணமிருக்கச் சிறுமியர் பக்கம் விரைந்து ஓடுகிறான். ஆனால் அந்தச் சிறுமிக்கு எவ்வளவு இறுக்கி அடிக்கவேண்டும் என்பது அவனுக்குத் தெரியாது. எனவே மெதுவாகத் தட்டுகின்றான்.

கூட்டத்தவர்களுக்கு அடக்கமுடியாத சிரிப்பு. அதனால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் சொரிகின்றது. ''அவ்வளவு இலேசாக அவன் அடித்திருக்கக்கூடாது'' என்று கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடி முடிந்தவர்கள் போகப் புதியவர்கள் சேருகின்ருர்கள். சூரியன் அஸ்தமித்து இருள் சூழவே எல்லோரும் வீடுகளுக்குச் செல்லுவார்கள்.

இந்த விளையாட்டிலே ஒரு சிறப்புண்டு. அதாவது புத்தாண்டு காலத்தில் மாத்திரமே இது விளையாடப்படுகின்றது. பெனேம்பென் தலைநகரிலன்றி எமது பழைய நகரான அங்கோரைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயே இது விளையாடப்படும். பாடசாலைகளும் அலுவலகங்களும் மூடப்பட்டுவிடுவதனுலும், ஏப்பிறல் மாத வெப்பத்திலிருந்து தப்பிக்கொள்ள எல்லோரும் வெளியூர்களுக்குச் செல்வதனுலும், தலைநகர், புத்தாண்டு விடுதலை நாட்களிலே வெளிச்சுப்போயிருக்கும்.

பல்லாயிரக்கணக்கான ஏனைய குடும்பங்களைப்போலவே, மக்கள் விளையாடுகின்ற பலவிதமான விளையாட்டுக்களையும் பார்க்கவென்று, நாங்களும் புத்தாண்டுத் தினத்தன்று பெனேம்பெனிலிருந்து அங்கோருக்குச் சென்ரேம். அங்கோரிலேயே எமது மன்னர்கள் வாழ்ந்தார்கள். அங்கு இந்த விளையாட்டுகள் ஆயிரம் ஆண்டுகளாக விளையாடப்பட்டு வருகின்றன.

அங்கோரை நோக்கி வடதிசையாக நாம் மோட்டார் வாகனத்திற் சென்றபோது சிவப்புக் கொடிகளாலும் நீலக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்ட பல வீடுகளைக் கண்டோம். வழியில் ஒரு கோவிலுக்கண்மையில் எமது வாகனத்தை நிறுத்தி இறங்கினேம். அக்கோவில் வாயில் மலர்களாலும் வைன் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோவிலுக்குள்ளே, மஞ்சள் காவி அணிந்த குருமார், விசேடமாக அமைக்கப்பட்ட மரப்பந்தரின் கீழ் இருந்து அங்கு சென்றவர்களுடன் பேசிக் கொண்டிருந்தனர். ஆனுல் உண்மையில் மணல்மலைகள் கட்டுவதற்காகவே நாங்கள் அக்கோவிலுக்குச் சென்ரேம். எமது பௌத்த மதத்தின்படி புத்தாண்டுத் தினத்தன்று மணல் மலைகள் கட்டுவது மிகவும் முக்கியமாகும். இந்த மணல் மலைகளைக் கட்டுவது ஒருவகையான வணக்க முறையாகும். இத்தினத்தன்று கோவில்கள் மிகவும் சுத்தமாக இருக்கும். அத்துடன், மழையை விரைவில் வரச்செய்வதற்காக எல்லா விக்கிரகங்களும் நீராட்டப்படும்.

நாங்கள் பாகொங் சிதைவுகளை அடைந்தபொழுது மற்றுமொரு விளையாட்டு நடந்துகொண்டிருந்தது. எனது பெற்ருர் புகழ்மிக்க பாகொங் சிதைவுகளைச் சுற்றிப் பார்க்கச் சென்ருர்கள். நான் விளையாட்டைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். மந்தமாருதம் வீசிக்கொண்டிருந்தது. அதிலே திளைத்தவனுகை, முதிர்ந்து பருத்த மரங்களுக்குப் பின்னுல் இருந்த எனக்கு, எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரும் வந்து விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தது தெரியவில்லை.

அடுத்தநாள் நாங்கள் மற்றுமொரு பழைய நகருக்குப் புறப்பட்டோம். அதன் பெயர் லோவி. அது அவ்வளவு தூரத்தில் இருக்கவில்லை. அங்கே புதிதாகக் கட்டப்பட்ட ஒரு தூபிக்கு அண்மையில் சிறுவர்கள் விளையாடுவதைக் கண்டேன். அவர்கள் என்ன விளையாடுகின்றார்கள் என்று பார்ப்பதற்கு நான் கிட்டச் சென்றேன்.

அதுவும் ஒரு புத்தாண்டு விளையாட்டு. அதிற் பங்குபற்றுபவர்கள் இரு கன்னைகளாகப் பிரிக்கப்படுவார்கள். எந்தக் கன்னை ஒரு கூடைக்குள் அதிகமான சிவப்பு விதைகளை வீசுகின்றது என்பதே விளையாட்டு. அவர்கள் குனிந்தும் வளைந்தும் இலக்கெடுத்துச் சரியாக விதையை வீசுவதற்குப் பாடுபடுகிறார்கள். ஆனால் முதியவர்களுக்குள்ள திறமை இவர்களுக்குக் கிடையாது. முதியவர்கள் இவர்களுக்கு அண்மையிலே போட்டி போட்டுக்கொண்டிருந்தனர். அனுபவமுள்ளவர்கள் என்றபடியால் முதியவர்கள் சரியாக விதையைக் கூடைக்குள் வீசிவிடுவார்கள்.

ஆனால் கயிறிழுப்புப் போட்டியே எனக்கு மிகவும் விருப்பமான புத்தாண்டு விளையாட்டு. இந்த விளையாட்டு உங்களுக்குத் தெரிந்த ஒன்றாக இருக்கக்கூடினும் நாங்கள் பாம்பை வைத்து விளையாடுவோம் என்பது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். உண்மையான பாம்பல்ல. பல கயிறுகளை ஒன்றாகத் திரித்து ஒரு பாம்புபோலச் செய்துகொள்ளுவோம். பாம்பு எமது புராணக் கதைகளிலுள்ள நாலு தெய்வங்களுள் ஒன்று. எமது மிகப் பழைய நகரமாகிய அங்கோர் தொமுக்குச் சென்றிருந்தால், நகரத்தின் எல்லா நுழை வாயில்களிலும் இந்தப் பாம்பு கல்லிற் செதுக்கப்பட்டிருக்கக் கண்டிருப்பீர்கள்.

ஆண்களும் பெண்களும் இப்போது என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்போம். கன்னைத் தலைவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். ஒரே சத்தமாக இருக்கிறது. கடைசியாக, மஞ்சள் உடுத்திருக்கும் பெண்ணும் நீலம் உடுத்திருக்கும் ஆணும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

பாம்பு நேராக நிலத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆண்களும், பெண்களும் தத்தமக்குரிய இடங்களுக்குச் செல்லுகின்றார்கள். மத்தியஸ்தருடைய விசில் அவருடைய வாயில் இருக்கிறது. இருபக்கமும் தயாரானதும், போட்டி ஆரம்பமாகும். இதோ தயார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்காரர் மூச்சடக்கி இழுக்கின்றனர், அவர்கள் தங்களுடைய பலம் முழுவதையும்

ஒரு காலிற் சேர்த்துக்கொண்டு அடுத்த காலை முன் நீட்டுகின்றார்கள். அவர்களுடைய முகங்கள், வீங்கி இரத்த நிறமாகிவிட்டன. அவர்கள் எவ்வளவு முயலுகிறார்கள் என்பதை அது காட்டுகின்றது. பார்ப்பவர்கள் விசில் அடித்து உற்சாகப் படுத்துகின்றார்கள். பாம்பு சில அங்குல தூரம் முன்னுக்கு அசைந்து மீண்டும் பின்னுக்கு அசைகின்றது. மேலும் உற்சாகக் குரல்கள். சற்றுப் பொறுங்கள். பெண்கள் பலமாக இழுக்கிறார்கள் போல இருக்கின்றது. பாம்பு காற்றில் அசைகின்றது. ''இழுங்கள்! இழுங்கள்!'' என்று சனங்கள் பெண்களை உசார்ப்படுத்துகின்றார்கள். திடீரென வானைப் பிளக்கின்ற ஒரு பெரும் சத்தம். பெண்கள் பாம்பைத் தங்கள் பக்கம் இழுத்துவிட்டார்கள்! பெண்கள் வென்றுவிட்டார்கள்! ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் பக்கம் கூட ஆட்கள் நின்றார்கள். ''அடுத்த ஆண்டு பாருங்கள் . அவர்களைத் தோற்கடித்து விடுகிறோம்'' என்று ஆண்கள் புன்னகையுடன் கூறுகின்றார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# லாவோஸ் புத்தாண்டு

முன்னொருகாலத்தில் கீழைத் தேசத்திலே ஒரு சோதிடர் இருந்தார். அவர் ஒரு 'வயோதிபர்; நல்ல புத்திசாலி. அவர் எந்நேரமும் வானத்தைப் பார்த்து சூரியன், சந்திரனதும் நட்சத்திரங்களினதும் அசைவுகளைப் பற்றிப் படித்துக்கொண்டிருப்பார். நட்சத்திரங்களைப் பற்றிய அறிவு வளர வளர அவர் ஒரு பொருத்தமின்மை இருக்கக் கண்டார். கோடைகாலத்தைவிட மாரிகாலத்திலே சூரியன் பிந்தி உதித்து முந்தி அஸ்தமிக்கின்றது. இது சரியில்லை. வெளிச்சம் வெப்பம் இரண்டுக்கும் மக்களுக்குச் சூரியன்தேவை. அத்துடன், தாவரங்கள் வளருவதற்கும், பூக்கள் மலருவதற்குமே சூரியன் தேவை. அப்படியிருக்க மாரிகாலத்தில் ஏன் இந்தச் சூரியன் மறைகின்றது?'' என்று அந்தச் சோதிடர் சிந்தித்தார்.

இந்தச் சோதிடருடைய புகழ் கிழக்கு நாடுகள் முழுவதிலும் பரவியது. அவரிடம் புத்திமதி கேட்பதற்கு எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் வந்தார்கள். ஒருநாள் ஒரு பெரிய கூட்டம் மக்கள் அவரைப் பார்க்க வந்தார்கள். ''ஏதோ முக்கியமாக இருக்கவேண்டும்'' என்று சோதிடர் சிந்தித்தார். அது உண்மையில் முக்கியமானது தான். புத்தாண்டு கொண்டாடுவதற்கு ஒரு நாளைக் குறித்துத் தரும்படி கேட்பதற்காக மக்கள் வந்திருந்தார்கள்.

''எப்போது என்று சொல்லலாம்?'' என்று அச்சோதிடர் தாடியைத் தடவிக்கொண்டு கடுமையாகச் சிந்தித்தார். வானத்தைப் பார்த்துத் தான் கற்றுக் கொண்ட ஒரு விடயம் திடீரென அவருக்கு ஞாபகம் வந்தது. ''பகலுக்கு எதிர் இரவு. இருளுக்கு எதிர் வெளிச்சம். வெளிச்சமென்பது நல்ல அதிட்டம், நற்பேறு, இன்பவாழ்வு ஆகியவற்றைக் குறிக்கும். எனக்கு விடை கிடைத்துவிட்டது. பகற்பொழுது நீண்டதாகவும், இராக்காலம் குறுகியதாகவும் இருக்கும் காலத்தின் ஆரம்பமே புத்தாண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக இருக்கவேண்டும்'' என்று அவர் தன்னுள்ளே முடிவுசெய்து கொண்டார்.

அந்தக்காலம் சரியாக எப்போது ஆரம்பிக்கின்றதென்று பார்க்கும்படியாகத் தமது சீடர்களுக்குக்கூறினர். சீடர்கள் அதைக் கூறியதும் ''ஐந்தாம் வளர்பிறையிலே புத்தாண்டைக் கொண்டாடுங்கள்'' என்று அங்கே கூடியிருந்த மக்களுக்குச் சோதிடர் கூறினர்.

புத்தாண்டைத் தாம் விரைவிலே கொண்டாடலாம் என்ற மகிழ்ச்சியுடன் அம்மக்கள் திரும்பிச் சென்றுர்கள். அக்காலந்தொடக்கம், அடுத்த புத்தாண்டு சரியாக எப்போது ஆரம்பிக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு அவர்கள் அந்தச் சோதிடரிடம் செல்வார்கள். இன்று கூட, லாவோஸ் இராச்சியத்திலே வழமையாக ஏப்பிறல் மாதத்தில் வருகின்ற பிமைக்குரிய காலத்தை, அதாவது, புத்தாண்டுக்குரிய காலத்தைக் குறிப்பிப்பதற்கு மக்கள் சோதிடரிடம் செல்வார்கள்.

லாவோஸ் மக்கள் எவ்வாறு பிமையைக் கொண்டாடுகின்றனர்? எல்லோரும் கொண்டாட்டங்களிலே பங்கு பற்றவேண்டும் என்பதற்காக, பாடசாலைகளும் அலுவலகங்களும் மூடப்படும். கொண்டாட்டங்கள், தலைநகரான லுஅங் பிறபங்கில் இரு வாரங்களுக்கு நடைபெறும்; ஏனைய இடங்களில் மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

ஓர் ஆண்டு முடிந்ததும் அந்த ஆண்டுக்குரிய தேவதை செல்ல அத்தேவதையின் இடத்துக்குப் புதிய ஆண்டுக்குரிய தேவதை வருகின்றதாக லாவோஸ் மக்கள் கருதுகின்றனர். இந்த இரண்டு நாட்களுக்குமிடையில், தேவதை இல்லாத ஒரு நாளுண்டு. அன்று எல்லோரும் புதிய தேவதையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பார்கள்.

முதலாவது பிமை நாள் ''தேவதை செல்லும் நாள்'' எனப்படும். அன்று, புதிய தேவதையைக் கௌரவிக்கும் முகமாக எல்லா விக்கிரகங்களுக்கும் நீராட்டக் குருமாருக்கு உதவி செய்வதற்காக எல்லோரும் வெள்ளிக் கிண்ணங்களிலே பன்னீர் கொண்டு கோவில்களுக்குச் செல்வார்கள். பர்மா தேசத்து மக்களைப் போலவே லாவோஸ் மக்களும் புனிதமாக்கும் சக்தி நீருக்கு உண்டு என்பதில் நம்பிக்கை உள்ளவர்கள். எனவே இக்காலத்தில் நீர்வீசும் கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன. அத்துடன், எல்லா வீடுகளையும் நிலத்திலிருந்து கூரைவரை உரஞ்சிக் கழுவிச் சுத்தஞ்செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஆண்டுப் பாவங்களை மக்கள் இப்படியாக ஆடிப்பாடி மகிழ்ந்து நீரினுற் கழுவித் தொலைத்து விடுவார்கள். எப்பொழுதும் நனைந்து நீர்வடிய இருப்பது நல்லது. அல்லது போனுல் மற்றவர்கள் கள்ளமாகப் பின்னுல் வந்து ஒரு வாளி நீரை அப்படியே தலையில் ஊற்றிவிடுவார்கள். இந்தக்காலத்திலே ஒருவர் வெளியிற்போவதாக இருந்தால், ஒரு வாளி நீரை அல்லது ஒரு பீற்றுக்குழாயை எடுத்துச் செல்வது நல்லது. பிமை தினத்தன்று ஒருவர் எவ்வளவுக்கு மகிழ்ச்சியாக இருக்கின்ருரோ அவ்வளவுக்கு அவர் வருடம் முழுவதும் மகிழ்ச்சியாக இருப்பார் என்பது லாவோஸ் மக்களுடைய நம்பிக்கை.


கோவில்களுக்கு மணல் கொண்டு செல்லும் வேடிக்கையிலும் நீங்கள் சேரலாம். அது புத்தாண்டுக்குரிய ஒரு நற்செயலாகக் கருதப்படுகின்றது. மணல், திருத்த வேலைகளுக்கும் நிலத்திற் போடுவதற்கும் பயன்படுகின்றது. அநேகமானவர்கள் கோவில் முற்றத்திலே மணல் மலைகள் செய்து மலர்களையும், கொடிகளையும் காசுத்தாள்களையும் அவற்றிலே குற்றிவிடுவோர்கள். இருவர் சேர்ந்து ஒரு மணல் மலையைச் செய்தால் அவர்கள் வருடம் முழுவதும் நல்ல நண்பர்களாக இருப்பார்கள் என்று நம்பப்படுகின்றது. இளம் பெண்களும் ஆண்களும், விசேடமாக விரைவில் விவாகஞ் செய்து கொள்ளும் எண்ணம் அவர்களுக்கு இருந்தால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒன்ருகச் சேர்ந்து மணல் மலைகள் அமைப்பார்கள்.

தேவதையில்லாத இரண்டாவது நாள் ''நிற்கும் நாள்'' என்று சொல்லப்படுகின்றது. அன்று யாரும் கடினமான வேலை எதனையும் செய்யக்கூடாது. காரணம், தேவதையில்லாதபோது ஒருவரை ஆபத்திலிருந்து யார் காப்பாற்றுவார்? அந்த நாளை விரைவாகக் கழிப்பதன்பொருட்டு பெற்ருர் பிள்ளைகளை நாட்டுப்புறங்களுக்கே கூட்டிச் செல்வார்கள். அங்கே நீர் கொட்டும் விளையாட்டுஇன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும்.

பிமையின் மூன்ரும் தினம் ''தேவதை வரும்'' தினம். அன்று லாவோஸில் உள்ளவர்களுக்குப் பெரும் ஆறுதலும் சந்தோஷமும். தேவதை வரும்பொழுது புத்தாண்டினையும் தன்னுடன் அழைத்து வரும். தேவதைக்குப் பூசை செய்து விசேட பிரார்த்தனைகள் செய்வதற்கு எல்லோரும் திரண்டு கோவில்களுக்குச் செல்வார்கள். இவர்கள் வீடு திரும்பி விரல்களிலே வெள்ளை நூல்களைக்கட்டிப் புத்தாண்டை வரவேற்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சிறுபிள்ளைகள், வருடம் முழுவதும் தாம் கீழ்ப்படிந்து நல்ல பிள்ளைகளாக இருப்பதாகத் தமது பெற்றோருக்குச் சத்தியஞ்செய்து கொடுப்பார்கள். அதன்பின்னர், பிள்ளைகள் தமது பெற்றோருக்குப் பன்னீர் தெளிப்பார்கள். அன்று முழுவதும் உண்பதிலும், குடிப்பதிலும், மேலும் மேலும் நீரில் நனைவதிலுமே கழியும். இவ்வளவு மகிழ்ச்சியுடனிருந்து செய்து கொடுத்த புத்தாண்டுச் சத்தியங்களை லாவோஸ் பிள்ளைகள் எப்படி மறப்பார்கள்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ் சிங்களப் புத்தாண்டு

றுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை எல்லோரும் புத்தாண்டுக்குரிய ஆயத்தங்களைச் செய்வதனால், இந்து சமுத்திரத்தினாற் சூழப்பட்ட சிறிய தீவாகிய எமது இலங்கையில் ஏப்பிறல் மாதம் எங்கும் ஒரே பரபரப்பாக இருக்கும்.

இன்று ஏப்பிறல் 13. புஞ்சிறுள வீட்டில் ஒரே ஆரவாரம்.

''அம்மா! அம்மா! முற்றத்திலுள்ள முருக்க மரங்களைப் பாருங்கள். கொத்துக்கொத்தாகச் சிவப்புப் பூக்கள் பூத்திருக்கின்றன'' என்று சொல்லிக்கொண்டு சிறுமி கமலா குசினிக்குள்ளே ஓடி வருகின்றாள்.

''ஆம், கமலா. புத்தாண்டு அண்மையில் வருகின்றது என்பதை எமக்குக் கூறுவதற்காக முருக்க மரங்கள் ஒவ்வொரு ஆண்டும் இக்காலத்திலே பூக்கும்'' என்று அவளுடைய அம்மா றன்மனிக்கா கூறுகின்றாள்.

''புத்தாண்டு! ஓகோ, அதற்காகவா சென்ற கிழமை அப்பா வீட்டுக்கு வெள்ளையடித்துக் கழுவிச் சுத்தஞ்செய்தார்? அதற்காகவா நீங்கள் எங்களுக்குப் புத்தாடைகள் தைக்கிறீர்கள்?'' என்று கமலா கேட்கின்றாள்.

''ஆமாம், இம்முறை நாங்கள் எல்லாரும் மஞ்சள் நிற ஆடைகள் அணியப் போகின்றோம். ஏன் தெரியுமா?'' என்று றன்மனிக்கா வினவுகிறாள்.

கமலா இல்லையெனத் தலையை அசைக்கிறாள்.

''மஞ்சள் நிறம்தான் இந்த ஆண்டுக்குரிய அதிட்ட நிறம். ஒவ்வொரு முறையும் புத்தாண்டு ஆரம்பமாகின்ற சரியான தேதியையும் நேரத்தையும் கணிக்கும்போது சோதிடர்கள் ஓர் அதிட்ட நிறத்தையும் தெரிவு செய்வார்கள். கடந்த வருடம் வெள்ளை நிறம், அதற்கு முந்திய வருடம் சிவப்பு நிறம். இவை ஞாபகமிருக்கிறதா?'' கமலா ''ஆம்'' என்று தலையை அசைக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா, நீங்கள் செய்கின்ற பலகாரங்களும் புத்தாண்டுக்காகவா?'' என்று வினவுகிறாள். ''ஆம் குஞ்சு எனக்குக் கொஞ்சம் உதவிசெய்து

தாருங்கோ'' என்று றன்மனிக்கா கூறுகிறாள். அந்தச் சிறுமி அவளுடைய தாயாருக்குக் கிட்ட ஒரு பலகையில் இருந்து கொண்டு, அவளுடைய சின்னக் கைகளிலே மாவை எடுத்து வட்டம் வட்டமாகத் தட்டிக்கொடுத்தாள். அவளுடைய தாயார் அவற்றை ஒவ்வொன்றாக எண்ணெயிற் போட்டெடுத்தாள். அன்று மத்தியானம் அவர்களுடைய சாப்பாட்டு மேசையில் ஆறு ஏழு வகையான பலகாரங்கள் இருந்தன.

''கூ! கூ! கூகூ! கூகூ!'' என்று ஒரு சிறிய பட்சி பாடுகின்றது.

''அது என்ன பட்சி? அம்மா'' என்று கமலா வினவுகின்றாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன்? அதுதான் குயில். அது ஒவ்வொருமுறையும் ஏப்பிறல் மாதம் வரும். புத்தாண்டு விரைவில் வருகிறது என்று அது எமக்குக் கூறுகின்றது'' என்று தாயார் பதில் கூறினுள்.

''புத்தாண்டு எப்போது வருகிறது?'' என்று கமலா வினவுகின்ருள்.

''நாளைக்குக் கமலா. நாளை புத்தாண்டுத் தினம். நீங்கள் உங்களுடைய புதிய மஞ்சள் சட்டையைப் போட்டுக்கொண்டு பட்டாசுகள் கொளுத்தி, உங்களுடைய நண்பர்களுடன் விருப்பம் போல ஆடிப்பாடலாம்'' என்று தாயார் கூறுகின்ருள்.

''அம்மா, என்னுடைய சினேகிதிகள் எல்லாரும் முற்றத்தில் ஊஞ்சல்கள் கட்டி வைத்திருக்கிருர்கள். சீதாவுக்கு இருக்கு, நாலினிக்கு இருக்கு, அசோகாவுக்குமே இருக்கு. எனக்கும் கட்டித் தருவீர்களா அம்மா? சென்ற வருடம் உபாலி எனக்கொரு அழகான ஊஞ்சல் கட்டித் தந்தார்'' என்று அச்சிறுமி சொல்லுகின்ருள்.

உபாலி! ... வீட்டைவிட்டு ஓடிய அவளுடைய 18 வயது மகனுடைய ஞாபகம் வந்ததும் றன்மனிக்கா சற்றுநேரம் மௌனமாக இருக்கின்ருள். ஒன்பது மாதமாகிவிட்டது. அவன் இப்போது எங்கே இருப்பான்? எந்தப் பிள்ளையும் புத்தாண்டுத் தினத்தன்று பெற்ருருடைய அன்பை மறக்குமா? ...

''அம்மா, உபாலி நாளைக்கு வருவாரா?'' தாயாருடைய கண்களிலே நீர் ததும்புவதைக் கண்ட கமலா கேட்கின்ருள். அவள் துக்கப்படுவதை அவள் கண்டு சகிக்கமாட்டாள்.

''கட்டாயம், வருவான்'' என்று தாயார் அவளுக்கு உறுதியாகக் கூறுகின்ருள். ''புத்தாண்டு அவனை எம்மிடம் சேர்த்து விடும். அங்கே பார் உன்னுடைய அப்பா வருகிருர்.''

கமலா ஓடிப்போய் அவரைச் சந்தித்து ஒரு முத்தம் கொடுக்கிருள்.

''இதோ உனக்குப் பலூன்களும் பட்டாசுகளும்'' என்று அவளுடைய தகப்பனுரான புஞ்சிருள கூறுகின்ருர்.

''உங்களுக்கு நன்றி அப்பா'' என்று சந்தோஷத்தினுல் துள்ளிக் குதித்துக்கொண்டு கமலா கூறுகின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதற்குச் சந்தைக்குப்போய் அப்போது தான் புஞ்சிருள திரும்பிவந்தார்.

அவர் புத்தாண்டுக் கலப்புணவுக்குத் தேவையான உருளைக்கிழங்கு, வற்றாளங்கிழங்கு பூசினி, முட்டைக்கோவா, முந்திரிகை, வாழைப்பழம், பலாப்பழம் முதலிய பழவகைகளையும் தாவரக்கறி வகைகளையும் வாங்கிவந்தார். அவர் இரண்டு புதிய பானைகளையும் வாங்கி வந்தார்.

''அப்பா எனக்கு நாளைக்கு ஊஞ்சல் இல்லை'' என்று கமலா இரகசியமாகச் சொன்னாள்.

''வீட்டைச் சுத்தம் செய்ய நீ அம்மாவுக்கு உதவிசெய்தால் நான் உனக்கு ஓர் ஊஞ்சல் கட்டித்தருகிறேன். இன்று சாயந்தரம் நொனகத ஆரம்பமாவதற்கு முன்னால் நாங்கள் எல்லா வீட்டு வேலைகளையும் முடிக்கவேண்டும்'' என்று அவர் கூறினார்.

''நொனகத என்றால் என்ன அப்பா?'' என்று கமலா கேட்கிறாள்.

''நொனகத என்பது அதிட்டமில்லாத காலம். அது இன்று இரவு தொடங்கி நாளைக்காலை வரை இருக்கும். அந்த நேரத்திலே நாங்கள் ஒரு வேலையும் செய்யாமற் கோயிலுக்குச் சென்று வணங்கவேண்டும்'' என்று கமலாவுக்குச் சொன்னார்.


தன்னுடைய நண்பர்கள் போலவே தனக்கும் ஓர் ஊஞ்சல் வேண்டும் என்றதனால் தான் நல்ல பிள்ளையாக இருந்து தாய்க்கு உதவி செய்வதாகக் கமலா கூறினாள்.

புத்தாண்டுக்கு வேண்டிய ஆயத்தங்கள் எல்லாம் அன்று சாயந்தரமே புஞ்சிறாள வீட்டில் பூர்த்தியாகிவிட்டன. அவர்களுடைய வீடு ஒரு புத்தம்புதிய நாணயம் போன்று பளபளத்தது. முற்றம் மிகவும் துப்புரவாக இருந்தது. முற்றத்து மாமரத்துக்குக் கீழே புஞ்சிறாள கமலாவுக்குக் கட்டிய ஊஞ்சல் தொங்கிக்கொண்டிருந்தது. அன்று சாயந்தரம், நொனகத வேளையில் எல்லோரையும் போல கிராமத்துப் பஞ்சலைக்குச் சென்று புத்த பகவானை வணங்கினார்கள். அடுத்த நாட் காலை அவர்கள் அதிகாலையில் எழுந்தார்கள். அவர்கள் அவசர அவசரமாக முகங் கழுவிவிட்டு நொனகத முடிந்துவிட்டதைக் கோவில் மணிகள் அறிவிக்கும்வரை அடுப்புக்கு அருகில் உட்கார்ந்து இருந்தனர். புத்தாண்டுத் தினம் உதயமானதும், மணி ஓசைகேட்டது. புதிய பானையிலே புத்தாண்டு உணவைச் சமைப்பதற்காக றன்மனிக்கா கிழக்குத்திசை நோக்கி நின்று தீ மூட்டினாள்.

கோவில் மணிகளின் ஓசையும், புத்தாண்டுக் கீதமும், பட்டாசுகள் வெடிக்கின்ற சத்தமும் கேட்கின்றன. புத்தாண்டுக்குரிய முதலாவது போசனத்தைக் கமலாவுக்கும் தாய்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புஞ்சிறாள பரிமாறுகின்றார்.

இரவுப் போசனத்தின் பின்னர், றன்மனிக்கா புஞ்சிறாளவினுடைய இரு கால்களையும் வணங்கி வெற்றிலை வழங்குகின்றாள். அது அன்புக்கு அறிகுறி. அத்துடன் மன்னிப்புக் கேட்பதையும் காட்டும். தாய்க்குப் பின்னர், கமலாவும் சில வெற்றிலைகளைக் கையில் எடுத்துக் கொண்டு அவளுடைய பெற்றாருடைய கால்களிலே விழுந்து வணங்கினாள். கண்களிலே ஆனந்தக் கண்ணீர் ததும்பப் புஞ்சிறாளவும் றன்மனிக்காவும் தங்களுடைய புதல்வியை ஆசீர்வதிப்பதற்காகக் குனிந்தார்கள்.

அப்போது திடீரென நிலத்திலே ஒரு நிழல் விழக்கண்டார்கள். வாசற்படியில் கைகளிலே இரண்டு வெற்றிலைக் கட்டுகளை வைத்துக் கொண்டு உபாலி நின்றான். தமையனைக் கண்டதும், ''உபாலி அண்ணா!'' என்று சொல்லிக்கொண்டு கமலா அவனைநோக்கி ஓடினாள்.

உபாலி தயக்கத்துடன் சில அடிகள் முன்வைத்தான். பெற்றார் முன்னர் அடி பணிந்தான். அவர்களுடைய பாதங்களைத் தொட்டு வணங்கி வெற்றிலை வழங்கி ''என் அருமைப் பெற்றோரே என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்றான்.

புஞ்சிறாள குனிந்து, மகனுடைய தலையைத் தடவி ''புத்தபெருமான் உன்னைக் காப்பாற்றுவார்'' என்று மெல்லச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சற்றுநேரத்தின் பின்னர் புஞ்சிருளவினுடைய வீடு நிறையப் புத்தாண்டு விருந்தினர். இவர்கள் அன்பளிப்புகள் கொடுப்பதற்கும் கடந்த ஆண்டில் தாம் செய்த பிழைகளுக்கு மன்னிப்புக் கோரவும் வந்திருந்தார்கள். வெளியில் அக்கிராமத்தின் ஒவ்வொரு மூலையிலுமிருந்து மேளம் அடிக்கின்ற சத்தமும் ''ஒன்சிலி சிலி சில்லமலே ...'' என்று சிறுவர்கள் பாடுகின்ற சத்தமும் கேட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேகாலம்

எனது பெயர் யோஸ். ஆனால் எல்லோரும் என்னைப் பிபே என்றே கூப்பிடுவார்கள். எனக்கு வயது ஏறக்குறையப் பன்னிரண்டாக இருந்தாலும் ''பிபே இதைச் செய், பிபே அதைச் செய்'' என்று எல்லோரும் ஆணையிடுவார்கள்.

''பிபே! பிபே! இங்கே வா!''

அது எனது அக்கா புளோறு. என்னையும் எனது தம்பி மூவியையும் ஏதோ அலுவலாகப் போகும்படி சொல்வதற்குக் கூப்பிடுகின்றாள். கடந்த ஒரு வார காலமாக, எமது கிராமத்துக் கன்னிமரியாளுக்குச் சமர்ப்பிப்பதற்காக மற்றச் சிறுமியர்களுக்குப் புளோறு பூமாலைகள் கட்டிக்கொடுக்கின்றாள்.

''ஏன் பெண் பிள்ளைகள் மாத்திரம் மலர் மாலைகள் வழங்குகின்றார்கள்? நாங்கள் ஏன் வழங்குவதில்லை?'' என்று மூவி வினவுகின்றான்.

இந்த வழக்கம் எனக்குமே திகைப்பாக இருக்கின்றபோது ஏழு வயதுச் சிறுவன் மூவிக்கு நான் என்ன சொல்லுவேன்? மூன்று வயதுக்கும் பன்னிரண்டு வயதுக்கும் இடைப்பட்ட பெண் பிள்ளைகளே எப்பொழுதும் மலர் வழங்கி வருகின்றார்கள் என்றும், அவர்கள் மாத்திரமே மலர் வழங்க வேண்டும் என்றும் அம்மா கூறுகின்றாள். ''கன்னி மரியாளை நாங்கள் பிரார்த்தனை செய்தால் மாத்திரம் போதும். பெண் பிள்ளைகள் மலர் வழங்கட்டும்'' என்று நான் மூவிக்குச் சொன்னேன். அது எனக்கு அவ்வளவு முக்கியமான ஒரு விடயமன்று. எனக்கு வயது ஏறக்குறையைப் பன்னிரண்டாகிவிட்டது. விரைவில் நான் ஒரு வாலிபனாகிவிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மே மாதம். பாடசாலை இல்லை. கோடைகாலம் என்றதனால் அப்பாவினுடைய சிறிய பழத்தோட்டத்து மாமரங்களிலே பதமான பழங்கள் இருக்குமா என்பதே இப்போது முக்கியம். சாந்தகுருசனுட்பட பிலிப்பீன்ஸில் நடக்கின்ற மிகப்பெரிய கொண்டாட்டங்கள் மே மாதத்

தில் நடக்கின்றன என்பது இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது.

சாந்தகுருசன் என்பது என்னவென்று அறிந்து கொள்ள நீங்கள் விரும்பக்கூடும். சரி, எமது கிராமத்திலே அது ஓர் ஊர்வலத்தைக் குறிக்கும். அதன் முன்னணியில் வெண்கலவாத்தியக் கோஷ்டி ஒன்று செல்லும். ஊர்வலத்தில் எல்லாவயதுப் பிள்ளைகளும் இராசா இராணிபோல பளபளப்பான உடைகள் அணிந்து செல்வார்கள். பெரிய பட்டினங்களில் இந்த ஊர்வலம் ஒரு முறை மாத்திரம் மே மாதத்தில் நடாத்தப்படும்; ஆனால் எமது கிராமத்தில், ஒவ்வொரு நாளும் மாலை வேளையில், கன்னி மரியாளுக்குச் சிறுமியர் பூச்சரங்களை வழங்கிக் கோவிலினுள்ளே மலர்களைத் தூவிய பின்னர் நடாத்தப்பெறும். வளர்ந்த பெண் பிள்ளைகளே இந்த ஊர்வலத்திற் பங்கு பற்றுவார்கள். அதன்பின்னர் எவரேனும் ஒருவருடைய வீட்டில் ஒரு பெரிய விருந்து அளிக்கப் படும். கிராமத்தவர் எல்லோரும் இந்த விருந்துக்கு அழைக்கப்படுவார்கள். விருந்தையடுத்துப் பல விளையாட்டுகளும், கவர்ச்சிகரமான பல நாடகங்களும், காணிவற் சவாரிகளும் இடம்பெறும்.

சாந்தகுருசன் ஊர்வலத்திலே ஹெலன் மகாராணியாகச் செல்வதற்கு மிகவும் அழகான பெண் பிள்ளையே தெரிந்தெடுக்கப்படுவாள். இப்படியாகத் தெரிந்தெடுக்கப்படும் சிறுமி வெள்ளாடை தரித்து யேசுவின் சிலுவையினைக் கையிலே தாங்கியிருப்பாள். அவளுக்குப் பக்கத்திலே மகாராணியின் மகன் கொன்ஸ்ரன்ரைன் போல உடையணிந்து ஒரு சிறுவன் செல்வான். அவர்களுக்குப் பின்னே ஏனைய அரசிகள் செல்வார்கள்: தேவதைகளின் அரசி, மலர்களின் அரசி, நீதி அரசி, சட்ட அறிஞர் உடைதரித்த ஒரு சிறுமி, ஒரு முஸ்லிம் அரசிளங் குமாரி.

புளோருவிடம் கேட்டால் இந்த ஊர்வலத்துக்குக் காரணமான கதையைச் சொல்லுவாள். சாந்தகுருசன் என்பது உண்மையான சிலுவையை, அதாவது யேசு அறையப்பட்ட சிலுவையை மகாராணி ஹெலன் தேடிச் சென்றமைபற்றிய கதையாகும். எவ்வளவோ காலத்திற்கு முன்னர் கிறிஸ்து சமயத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்ட பேரரசன் கொன்ஸ்ரன்ரைனே அந்தச் சிறுவன்.

அவள் கூறுவது உண்மை. அது ஓர் அற்புதமான கதை என்பது எனது அபிப்பிராயம். மூவி கூட இதனை ஏற்றுக் கொள்ளுகிறான். ஆனால் ஊர்வலத்திலே வருகின்ற கிழவனுக்கு மூவி பயம். அது மெதுசலா. இதுவரை வாழ்ந்த மிக முதிர்ந்த மனிதன் மெதுசாலாவேயாகும். அவர் ஒரு பெரிய விளக்கைக் கையிற் கொண்டு எப்பொழுதும் ஒரு வண்டியிற் செல்லுவார். அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது கண்டாலும் மூவிக்கு நடுக்கம் பிடிக்கும்.

இந்த ஊர்வலம் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். மிகவும் கம்பீரமான சிகரங்களைத் தாங்கி, மினுங்கும் ஆடைகளணிந்து, எல்லோரும் மெழுகுதிரிகளைக் கொளுத்திப் பிடித்துக் கொண்டு கீதங்களும் நாட்டுப்பாடல்களும் பாடிக்கொண்டு செல்வதைக் காண்பது மூவிக்கும் எனக்கும் உருக்கமும் ஆச்சரியமுமாக இருக்கும்.


நான் ஒரு இரகசியம் சொல்லட்டுமா? இன்று எங்களுடைய குடும்பத்தாருக்கு ஒரு விசேடமான நாள். ஏனெனில் இன்று இரவு விருந்து எமது வீட்டிலேயே கொண்டாடப்படும். நேற்று எமது அயலிலுள்ள நானு சிகாரே விருந்தளித்தார். நாளை எமது ஆசிரியருடைய வீட்டில் நடைபெறும். இன்று நடக்கப்போகின்ற விருந்துக்குத் தேவையான உணவு வகைகளைத் தயாரித்துக் கொண்டு, அம்மாவும், புளோருவும் கடந்த இரண்டு வாரமும் குசினிக்குள்ளேயே பெரும்பாலும் இருந்தார்கள். ஒரு வருடகாலம் முழுவதும், சுகவாழ்வையும் சுவையான உணவுகளையும் தந்தமைக்குக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டே மே மாதத்தில் ஒவ்வொரு நாளும் நாம் விருந்து கொண்டாடுகின்றோம். இப்போது கூட ஏதோ ஒரு வேலை செய்விப்பதற்காகப் புளோரு என்னைக் கூப்பிடுகிற சத்தம் கேட்கிறது. இன்னுமொரு இரகசியம் இருக்கிறது. எங்களுடைய வீட்டில் எங்களுடைய அம்மாவே விருந்தளிக்கின்றபடியினால், ஊர்வலத்திற் செல்லுகின்ற சிறுமியரை அம்மாவே தெரிவு செய்வாள். ஊர்வலத்தில் புளோருவே ஹெலன் மகாராணியாக இருப்பாள். காட்டிக்கொள்ள விரும்பவில்லை என்றாலும் அதையிட்டுப் புளோருவுக்கு ஒரே மகிழ்ச்சி. மூவியே கொன்ஸ்ரன்ரைனாக இன்று செல்வான். எங்களுடைய அப்பாவுக்கு இன்று இரவு பெருமையாக இருக்கும்.

இராப்போசனத்தின் பின்னர் விளையாட்டுக்களை ஒழுங்கு செய்வதே இந்த விருந்தில் எனக்குரிய பங்கு. இன்னும் சற்று நேரத்தில் அப்பாவும் நானும் வீட்டு முற்றத்தைத் துப்புரவு செய்வோம். வர்ண வர்ணக் கொடிகளும் பளபளப்பான பதாகைகளும் வைக்கோற் பாவைகளும் கட்டி முற்றத்தைச் சோடிப்போம். அத்துடன் பரிசில்களையும் ஒழுங்கு செய்வோம். இதுவே எனக்குப் பிடித்தமான வேலை.



மே மாதக் கொண்டாட்டத்திலே மிகவும் விருப்பமான விடயம் என்னவென்று நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளோருவைக் கேட்டால், மாஸ்கூட்டமும் சாந்தகுருசனுமே என்று அவள் கட்டாயம் சொல்லுவாள். அம்மா எமக்குச் சொல்லும் வார்த்தைகளை அவளும் சொல்லுவாள். ''நல்ல விளைச்சலுக்காக நாம் நன்றி செலுத்தும் காலம் மே மாதம். சாந்தகுருசன் ஓர் அறுவடைக் கொண்டாட்டமும் சமயக் கொண்டாட்டமுமாகும்'' என்று அம்மா போன்று அவளும் பயபக்தியுடன் சொல்லுவாள். ''பிபே, நீ எப்பொழுதும் சாப்பிடுவாய். ஆனால், எப்போதாவது கடவுளுக்கு நன்றி செலுத்தியதுண்டா?''

''சத்தியமாக நன்றி கூறுவேன். மூவி கூடக் கூறுவான்'' என்று நான் சொல்லுவேன். ஆனால், சுவையான ஒரு மாங் கனியை அல்லது தேங்காய்ப் பாலை அருந்தும்போது நான் உண்மையிலே கடவுளை மறந்துவிடுவேன்.

மீண்டும் விளையாட்டுக்களைப் பற்றிப் பேசுவோம். எனக்கு மிகவும் விருப்பமான விளையாட்டு பாபிதின் எனப்படும். இதிலே, விதம்விதமான பரிசுகள், அதாவது, காசுக் குற்றிகள், கற்கண்டுக்கட்டிகள், பழங்கள் முதலியன ஒரு மூங்கிற் படலிலே தொங்கவிடப்பட்டு ஏய்ப்புக்காட்டித் தாழ்த்தி உயர்த்தப்படும். அது தாழ்த்தப்படும் போதெல்லாம் அப்பொருள்களை இழுத்தெடுப்பதற்குச் சிறுவர்கள் பாய்வார்கள்.

பரிசுப் பானையை அடிக்கும் விளையாட்டும் ஒன்றுளது. எங்களுடைய கண்கள் முதலிலே கட்டப்படும். அதன் பின்னர் நாங்கள் ஒரு மண்பானையை ஒரு தடியால் அடிக்கத் தெண்டிப்போம். நான் ஒரு முறை மாத்திரமே இப்படியாக அடித்தேன். அப்போது எல்லாவகையான சிறு சிறு பொருள்களும் கலகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று பானையிலிருந்து கொட்டுப்பட்டன. மே மாதத்தில் நாம் விளையாடும் மற்றுமொரு விளையாட்டு பலே-செபோ எனப்படும். இதிலே வளர்ந்த தென்னை மர உச்சிகளைத் தொடும் மூங்கிற் கம்பங்களில் நாங்கள் ஏறுவோம். மர உச்சியை அடைவோர் அங்கே பல பரிசில்களைக் கண்டெடுப்பார்கள். ஒவ்வொரு நாளும் சாயந்தரம் நடனம் இருக்கும். புளோரா நடனம் பார்க்க விரும்புவாள்.

எனக்கும் மூவிக்கும் காணிவலுக்குப்போய்ச் சவாரி செய்வதும் வேடிக்கைகளைப் பார்ப்பதும் தான் விருப்பம்.

வீட்டில் இப்போது என்ன நடக்குமோ என்று தெரியாது. ஒருகால் எட்டிப்பார்ப்போம். என்ன ஆச்சரியம்! எங்களுடைய பியானோவை அம்மா ஒரு மேடைபோல அலங்கரித்திருக்கின்றாள்; கேக்குகளை எல்லாம் துண்டுதுண்டுகளாக வெட்டி மேசையில் வைத்திருக்கிறாள்; முற்றத்தைத் துப்புரவு செய்யவரும்படி இப்போது என்னைக் கூப்பிடுகிறாள். நான் இப்போது ஓடிப்போக வேண்டும். இது தான் என்னுடைய வேலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை

சியோ மிங்குடன் புத்தாண்டு

எழுதியவர்: தம் யூ சின்

சித்திரம்: லிம் சியா–தொங், லோ புவே குவா

தீ விழா

எழுதியவர்: சைறஸ் தல்றபஸ்

சித்திரம்: அலி அக்பார் சதிகி

பாவைத் தினமும் சிறுவர் தினமும்

எழுதியவர்: தெய்ஜி சேத

மொழிபெயர்ப்பு: கியோகோ மத்சுஹை

சித்திரம்: றியுசி தெருசிமா

வங்காளப் புத்தாண்டு

எழுதியவர்: றிஸியா கான்

மொழிபெயர்ப்பு: கபீர் சவுட்றீ

சித்திரம்: பிருனெஸ் மொன்டல்

நீர் விழா

எழுதியவர்: தின் பாற்

சித்திரம்: முவங் சீன்

அங்கோரில் புத்தாண்டு

எழுதியவர்: தொங் தெம், லி சின்

சித்திரம்: குஓட் துன்

லாவோஸ் புத்தாண்டு

எழுதியவர்: தஓ நொய் சுறபங்

சித்திரம்: கே. லுவங்ருஜ்

தமிழ் சிங்களப் புத்தாண்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுதியவர்: சந்திரரத்ன மஹதந்தில

மொழிபெயர்ப்பு: ஆர். எம். அபேசேகர, எ. பீ. வீரசேகர

மே காலம்

எழுதியவர்: எலிசபெத் எம். கொன்சேல்ஸ்

சித்திரம்: ஜீசஸ் கியு. கிநஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது, 9 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவருக்கு ஆசிய நாடுகளின் விழாக்கள் பற்றி எடுத்துரைக்கும் நோக்குடன் எழுதப்பட்ட இரு நூல்களுள் முதலாவதன் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதில், ஒன்பது ஆசிய நாடுகளின் விழாக்கள் பற்றி மிகவும் சுவையான முறையில் எடுத்து உரைக்கப்பட்டுள்ளது.

TAMIL TRANSLATION OF *FESTIVALS OF ASIA*

சிங்கப்பூர்

ஈரான்

யப்பான்

பங்களதேஷ்

பர்மா

கம்போடியா

லாவோஸ்

இலங்கை

பிலிப்பீன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org